20 காசு

காஞ்சி

24-3-69 நிறுவனர்: அண்ணாதுரை

6-6-

உள்ளே....

★

காட்டாட்சி....! (தம்பிக்கு மடல்)

திரு. கிரியின்வெற்றி! (தலையங்கம்)

பழகத் தெரிய வேணும்! (சிறுகதை)

நோட்டீஸ் கொடுத்தார்களாம்! (நண்பர்க்கு மடல்)

கவிதைகள்!

கேட்டீரா சேதி?

முகப்பில்:
மாண்புமிகு
திரு. வேழவேந்தன்
தொழிலாளர் நலத்துறை
அமைச்சர் அவர்கள்

ஆ. சேரன்ஜாளை 23-4-69.

அண்ணா வாழ்க!

கேட்டாரைப் பிணைக்கின்ற சொல்லின் செல்வர்
கேளாரும் சுவைக்கின்ற எழுத்தின் வேந்தர்
நாட்டாரின் நலமெண்ணி அன்பும் கொண்டு
நற்றொண்டு ஆற்ற வந்த அறிவின் ஊற்று
காட்டாற்றின் வெள்ள மெனச் சொல்லை வீசி
கனித் தமிழர் நெஞ்சத்தில் இடமே பெற்று
நாட்டாரின் நல்லன்பில் திளைத்து வாழும்
நல்லவராம் பேரறிஞர் அண்ணா வாழ்க!

இனிக்கின்ற தமிழ்பேசி இனிமை கூட்டி
இன்தமிழின் சுவைதன்னை இந்த வையம்
கனிகின்ற காதலுடன் போற்ற வேண்டி
கற்றவரும் காமுறவே காந்தம் ஏற்றி
தனிச் சிறப்பின் அறிவாலே இனிக்கும் நாவால்
தரணியிலே தமிழ் பேசும் அண்ணா வாழ்க!
மனிதருக்குள் மாணிக்கம் அன்பின் தங்கம்
மாசில்லா தமிழறிஞர் அண்ணா வாழ்க!

கள்ளமிலா அருளுள்ளம் அன்பு உள்ளம்
கற்றதினால் கனிந்திட்ட காதல் உள்ளம்
உள்ளத்தால் உயர்ந்திட்ட உயர்வின் உள்ளம்
ஊக்கத்தால் தமிழ்நலமே நாடும் உள்ளம்
வெள்ளமென மெய்யன்பைப் பொழியும் உள்ளம்
வேதனைகள் தீர்க்கின்ற மேன்மை உள்ளம்
தெள்ளுதமிழ் தேர்ந்திட்ட அறிவின் உள்ளம்
தீங்கின்றி எந்நாளும் வாழ்க! வாழ்க!

எண்கொண்டு அளந்தறிய இயலா மக்கள்
எண்ணத்தில் நீங்காமல் நிலைத்த நல்லார்
பண்கொண்டு பாவாக்கும் புலவர் வாழ்த்தும்
பாட்டினிலே தலைவரென விளங்கும் மேலோர்!
விண்கொண்ட புகழ்கொண்ட அறிஞர் அண்ணா
வியனுலகில் பல்லாண்டு வாழ்க! வாழ்க!
வன்கொண்ட நெஞ்சத்தின் வலிமைகொண்டு
வளந்தன்னைச் சேர்க்கின்ற அண்ணா வாழ்க!

—சண்முக தாயுமானவன்.

மறந்ததனால்...!

புத்தன் பிறந்தொரு போதம் உரைத்ததை
மெத்த மறந்ததனால்—இன்று
குத்துக் கொலைகளும் கோரக் கொடுமையும்
நித்தம் நடக்கிறது!

ஏசு பிறந்துதன் எண்ணம் உரைத்ததை
பேசி மறந்ததனால்—இன்று
நேசம் மறைந்திட நேர்மை குறைந்திட
தேசம் தவிக்கிறது!

நபிகள் பிறந்தொரு நன்மை உரைத்ததை
நாமும் மறந்ததனால்—இன்று
புவியின் உடம்பெலாம் போரின் கொடுமைகள்
பொருந்திச் சிரிக்கிறது!

சாந்தி பிறந்தொரு கொள்கை உரைத்ததை
காலம் மறந்ததனால்—இன்று
சாந்தி ஒழிந்திட சண்டை மலிந்திட
ஞாலம் விழிக்கிறது!

·பொன்·

தமிழ்க் காதல்!

தாய்மொழிபாற் காதல்கொளுஞ் சால்புப் பண்பைத்
தகுதியற்ற கயமையெனத் தாக்கு கின்றார்!
பேய்வயிற்றிற் பிறந்திங்கே பிணத்தைத் தின்னும்
பித்துமனத் தன்னலத்துப் பேயர் சில்லோர்
நாய்மீதும் பொருள்மீதும் காதல் கொள்வார்!
நற்றமிழைக் காதலித்தாற் குற்றஞ் சொல்வார்!
மாய்ந்தொழிந்த பிணத்திற்கும் மாலை போடும்
மடவீர்செந் தமிழ்மீது பகையேன்? சொல்வீர்!

இன்றிருந்து நாளைக்கே சாகும் பெண்ணை
"என்மனைவி; என்மனைவி!" என்பீர்! போற்றி
நன்றவளைக் காதலிப்பீர்! நன்மை செய்வீர்!
நாடோறும் அவள்வழியில் நடப்பீர்! ஏற்றி
மின்னகையும் பட்டுடையும் பூட்டி மேனி
மேன்மையுறக் காப்பளித்து மேவு கின்றீர்!
இன்னுயிரைத் தாய்மொழியை இன்பந் தன்னை
இறப்புவரை துணையாகும் எண்ணந் தன்னை

நல்லறிவை நற்பண்பை நன்மை யெல்லாம்
நயத்தோடு கற்பிக்கும் அன்னை, தெய்வ
வல்லாற்றல் நல்லறத்தை, வாழ்வை, நெஞ்ச
மகிழ்ச்சிக்குந் துயருக்கும் வடிவந் தன்னைச்
செல்வத்தைக் காதலித்தல் தீங்கோ? நாளை
செத்தழியும் ஊனுடலைப் போற்றும் நல்லீர்!
கல்விக்கிங் குயிர்த்துணையைச் சாவா வாழ்வைக்
காதலித்தல் பேரறிவே! கற்பே! அன்னை

கற்பித்த செந்தமிழைக் காதல் வாழ்வைக்
கண்மணியைக் கற்கண்டு கட்டி தன்னைச்
சொற்பித்தம் ஊட்டிமதி சொக்கச் செய்யும்
சொல்லமிழ்தத் திருக்கடலை சுவையின் வானை
எற்கமைந்த எழிலொளியை ஏமப் பேற்றை
ஏன்பற்று கொள்வதெனக் கேட்டே ஏய்க்கும்
கற்றானை என்னென்போம்? காசுக் கேங்கும்
கல்லாரை என்னென்போம்? காப்போம் தாயை!

செத்தாலும் நம்பெயரை வாழச் செய்யும்
சீர்தாய்மை மொழிக்காதல் செழிக்க வேண்டும்!
ஒத்துள்ளத் தெண்ணமெனும் வடிவங் கொள்ளும்
உணர்வேந்திச் செல்லுமெழில் ஊர்தி, அன்புச்
சொத்துக்கும் சுவைகளுக்கும் சுற்றம், ஆற்றல்
சுடர்மெய்ப்பா டுணர்த்துமெழின் மொழியைப்போற்றி
ஒத்துள்ளம் ஒன்றுதிரண்டு ணர்ச்சி போடே
ஓங்கிவளர்ந் துயர்ந்தொளிர உழைப்போம் நாமே!

—புலவர். தி. நா. அறிவுஒளி

காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

மலர் 6 | 24—8—69 | இதழ் 6

திரு. கிரியின் வெற்றி!

இந்தியத் துணைக்கண்டத்தையும், குறிப்பாக அனைத்திந்தியக் காங்கிரசுக் கட்சியையும் ஒரு கலக்கு கலக்கிவிட்ட குடியரசுத் தலைவர் தேர்தலில், திரு. வி. வி. கிரி அவர்களே, இரண்டாவது கணிப்பு வாக்குகள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

திரு. கிரியின் வெற்றி ஓரளவு எதிர்பார்க்கப்பட்டதே என்றாலும், அவரது வெற்றி, தோல்வியினை நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநிலங்களவை உறுப்பினர்கள் ஆகியோரது வாக்குகளே தீர்மானிக்க முடியும் என்ற நிலையில், காங்கிரசுக் கட்சிக்கு இரு அவையிலும் பெரும்பான்மை பலம் இருப்பதனால், திட்டவட்டமான நிலையை எதிர்பார்க்க முடியாமலிருந்தது.

காங்கிரசுக் கட்சிக்குள்ளேயே ஏற்பட்டிருக்கிற போட்டி, பூசல் இவைகளின் எதிரொலி காரணமாக, திரு. கிரிக்கு காங்கிரசின் வாக்குகள் நிச்சயம் கிடைக்கக்கூடும் என்ற அனுமானம், உண்மையானதாகவே ஆகி, திரு. கிரியின் வெற்றியை உறுதிப்படுத்தி இருக்கிறது.

கிரி அவர்களது வெற்றி மூலம், காங்கிரசுக் கட்சியில், பிரதமர் இந்திரா காந்தி அவர்களது கரம் வலுப்பெற்று விட்டிருப்பதாக நம்பப்படுவது மட்டுமல்லாமல், நாடாளுமன்றத்திலும், மன்ற உறுப்பினர்களது பெரும்பான்மை ஆதரவு இந்திரா அவர்களுக்கே இருக்கிறது என்பதையும் தெளிவுபடுத்திக் கொள்ள வழியேற்பட்டிருக்கிறது.

மாநிலங்களைப் பொறுத்தமட்டில் மிகச் சில மாநிலங்கள் நீங்கலாக, பெரும்பான்மையானவற்றில் எதிர்க் கட்சிகளுக்குச் சமதையாகக் காங்கிரசும் இருந்து கொண்டுதான் இருக்கிறது என்ற உண்மைகூட, இத் தேர்தல் மூலம் வெளியாகி இருக்கிறது. ஆயினும் பல மாநிலங்களிலும் காங்கிரசின் வாக்கு திரு. சஞ்சீவ ரெட்டிக்குத் தரப்படாமல் திரு. கிரிக்கோ, மூன்றாவது வேட்பாளரான தேஷ்முக்கிற்கோ தரப்பட்டிருக்கின்றன. எனவே, சமதையான நிலையிலிருந்தாலும், கட்டுக்கோப்பு குலைந்திருக்கிறது என்பதும் வெளிப்படையாகத் தெரிகிறது.

மாநிலங்களிலும், நாடாளுமன்றத்திலும் இந்த அளவுக்குக் கட்டுக்கோப்பு குலைந்திருப்பதற்கு, முழு முதற்காரணம் உட்பூசல்களாகத்தானிருக்க முடியும். அடுத்ததுதான் மனச்சான்றின்படி வாக்களித்தது என்று கொள்ளவேண்டும்.

திரு. கிரி அவர்களது வெற்றி விரும்பி வரவேற்கப்படவேண்டிய வெற்றியாகும். கிரி அவர்களுக்கு, இந்த நாட்டுத் தொழிலாளர் வர்க்கத்தின் மீது நீங்காப்பற்றும் பாசமும் உண்டு என்பதை அவரது கடந்தகால வாழ்க்கை வரலாறு நமக்கு எடுத்துக்காட்டுகிறது.

துரதிருஷ்டவசமாக திரு. கிரி அவர்கள் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்தாலும், கடந்த காலத்தில் அவர், நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் ஆற்றிய அரும்பணிகள், அவர் ஒரு தேசியப் பரம்பரையைச் சார்ந்தவர் என்றே காட்டுகின்றன. காங்கிரசுக் கட்சியின் போராட்டங்கள் பலவற்றில் பங்குபற்றி சிறைவாசத்தினையும் மேற்கொண்டிருக்கிறார். குடியரசுத் தலைவராகவிருக்கும் ஒருவருக்கு இருக்கவேண்டிய அத்தனைத் தகுதிகளும் மிகுந்த அளவுக்கு உடையவர் அவர். இவரே காங்கிரசுக் கட்சியின் வேட்பாளராக நிறுத்தப்பட்டிருந்தால், சுதந்திரா, ஜனசங்கம் நீங்கலாக மற்ற அனைத்து எதிர்க் கட்சிகளும்கூட இவரை ஒருமுகமாக ஆதரித்திருக்கக் கூடும். அந்த அருமையான வாய்ப்பைக் காங்கிரசுக் கட்சி நழுவவிட்டுவிட்டதன்மூலமும், பின்னால் நடந்த போட்டி, பூசல்கள் காரணமாகவும், நாடு பற்றியும், மக்கள் எதிர்காலம் பற்றியும் கவலைப்படவேண்டிய அளவுக்கு நிகழ்ச்சிகளை உண்டாக்கிக் கொண்டிருக்கிறது.

காங்கிரசுக் கட்சியும் அதன் மேலிடத் தலைவர்களும் செய்த தவறுகள்—இமாலயத் தவறுகள் காரணமாகவே, காங்கிரஸ் கட்சியின் வாக்குகள் பலவாறாகச் சிதறும் நிலை ஏற்பட்டது என்பது நாட்டில் உள்ள அனைத்து எதிர்க்கட்சிகளும் கற்றுக்கொள்ளவேண்டிய பாடமாகும்.

கட்சிக் கட்டுப்பாடு என்பது மக்கள் நெறிக் கோட்பாட்டிற்கு முரணானதாகும் என்று யாரும் வாதிட முடியாது. அந்தக் கோட்பாடு சிதைக்கப்பட்டு சீர்குலைக்கப்பட அனுமதிக்கப்படுமானால் எந்த அரசியல் கட்சியாயினும் விபரீதங்களைச்சந்தித்தே தீரவேண்டும். காங்கிரஸ் இதற்கு இப்போது உதாரணம் படைத்திருக்கிறது.

திரு. கிரியின் வெற்றி, பிரதமருக்கு எதிராகச் செயல்படும் காங்கிரஸ் மேலிடத் தலைவர்களுக்கு ஒரு அதிர்ச்சியே யாகும். பின் விளைவுகள் எப்படி இருக்கும் என்பதை போகப் போகத்தான் தெரிந்துகொள்ள முடியும்.

ஆனாலும் குடியரசுத் தலைவர் தேர்தலுக்கான வேட்பாளர் என்ற வகையிலே தொடங்கிய குழப்பங்கள், தேர்தல் முடிவு என்பதனோடேயே முடித்து வைக்கப் பட்டால்தான் நாட்டுக்கும் நல்லது. காங்கிரசுக் கட்சிக்கும் நல்லது.

தவறு என்று மட்டுமே கூறி, பிரச்னைகளைப் பெரிது படுத்திக் கொண்டு போகாமல் பிரதமர் தரப்பினரும், கிண்டிகேட் தரப்பினரும் ஒரு சுமுக முடிவுக்கு வருவார்களானால், அதுதான் விரும்பத்தக்கதாக இருக்கும். அதுதான் உலகத்தின் இகழ்ச்சிச் சிரிப்பிலிருந்து இந்தியாவைக் காப்பாற்றும்.

★

மாநில சுயாட்சிப் போராட்டம்!

சிலம்புச் செல்வர் ம. பொ சி. அவர்கள், மாநில சுயாட்சிப் போராட்டம் என்று அறிவிப்புக் கொடுத்தவுடனேயே இங்குள்ள காங்கிரஸ்காரர்களும் ஏடுகளும், திரு. ம. பொ.சி. பயங்கரமான ஒரு பாதைக்கு நாட்டை அழைத்துச்சென்று விடப் போவதாகக் கூக்குரல் கிளப்பி விட்டனர். இந்தப் போராட்ட அறிவிப்பின் மூலம், மற்றுமொரு 'மகாகுசராத்' நிலையை ம. பொ. சி. உண்டாக்கிவிடுவார் என்றெல்லாம் பேசினர்.

திரு. ம. பொ. சி. அவர்களது கடந்தகால வாழ்வுப் பாதையினை மறைத்துவிட்டு, இப்போதைய அவரது சூழ்நிலையை மட்டும் கணக்குப் போட்டுப் பார்த்து, பிழைபட்ட விடையைத் தந்தார்கள் காங்கிரசுக்காரர்கள்.

எவ்வளவுபெரிய தலைவராக இருந்தாலும், எவ்வளவு பெரிய அமைச்சராக இருந்தாலும் ஏற்றுக்கொள்ள முடியாது; எங்கள் உரிமைகள் மதிக்கப்படவேண்டும் என்று வெகுண்டெழுந்த மாராட்டிர மக்களது நிலையை, இன்னொரு பக்கத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள், 'காட்டாட்சி' என்ற தலைப்பில் படம் பிடித்துக் காட்டியிருப்பதைப்பார்க்கக்கூடும்.

மாராட்டிரத்துக்கு தனி அமைப்பு வேண்டும் என்ற தணியாத தாகம் தந்ததன் விளைவுகள் அதிலே எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. 13 ஆண்டுக்காலத்துக்கு முன்புதான்— நேரு பிரதமராக இருந்து 'ராஜ்யபாரம்' தாங்கிய காலத்தில் 'மகாகுசராத்' போராட்டம் நடைபெற்றது. நடத்தியவர்கள் குசராத்திகள் மட்டுமல்ல, குஜராத் காங்கிரஸ்காரர்களேயாகும்.

அதுபோன்ற ஒரு பயங்கரமான நிலைமை ஆகஸ்ட் 20ல் தமிழகத்தில் நடைபெற்றுவிடும்; தடுத்துத் தீரவேண்டும் என்று பக்கம் பக்கமாக எழுதிக் குவித்தவர்களைத் தேடிப் பார்க்க வேண்டிய இரங்கத்தக்க நிலையினை யேற்படுத்தி விட்டிருக்கிறார், திரு. ம. பொ. சி. தன் தலைமைச் சிறப்பின் மூலம்.

மாநிலங்கள், இன்று மத்திய அரசுச் சுட்டிக் காட்டுகிற வழியிலேயே நடை பழக வேண்டியிருக்கும் நிலைமையினை, கடந்த ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் மிகத் தெளிவாக நமக்கு எடுத்துக் காட்டியிருந்தார்கள் ஒரு எளிய உவமையின் மூலம், டாக்டர் எழுதித் தரும் சிட்டுக்கு மருந்து கலக்கிக் கொடுக்கும் கம்பவுண்டர் நிலையில்தான் மாநில அரசுகள் இருக்கின்றன என்று.

இந்த எளிய உவமை விளக்கிக் காட்டும் உண்மையினை மக்கள் துல்லியமாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசிடம் அதிகாரங்கள் குவிக்கப்பட்டு, அதிகாரங்களின் உற்பத்திச் சாலையாக அது மாறிக்கொண்டிருப்பதனைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்பதிலே அக்கறைகாட்டிக்கொண்டிருந்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். அதிகாரப் பங்கீடு பரவலாக இருக்க வேண்டும் என்று முதன் முதலாகக் குரல் கொடுத்தவரும் மறைந்த மாமேதையேயாவார் என்றால் அது மிகையாக இராது.

அதிகாரக் குவிப்பு, சர்வாதிகாரப் போக்குக்கு வழிகோலிவிடும் என்பது மட்டுமல்லாமல் — குறைந்த அதிகாரங்களைக் கொண்டு மட்டும், ஒரு மாநிலம், மக்களுக்குத் தான் விரும்பும் நன்மையினைச் செய்ய முடிவதில்லை என்ற குற்றச்சாட்டும் நாடெங்கும் இப்போது புத்துயிர் பெற்றுக்கொண்டு வருகிறது.

பல்லாண்டுக் காலமாகவே திரு. ம. பொ. சி. அவர்கள் மாநிலங்கள் சுயாட்சி பெற்று இயங்க வேண்டும் என்ற கருத்துடையவராக இருந்து வந்திருக்கிறார் அக்கருத்தின் முதிர்ச்சி காரணமாகவே, இப்போது ஒரு அடையாள போராட்டத்தையும் நடாத்தி இருக்கிறார். மத்திய அரசின் கவனத்தைக் கவரும் விதத்தில் மத்திய அரசு அலுவலகங்கள் முன் மறியல் என்று தன் போராட்டத் திட்டத்தை வகுத்துத் தொண்டர்களுக்கும் வழங்கி இருக்கிறார் அவர்.

நடந்து முடிந்த இந்தப் போராட்டம் மூலம். எந்த வன்முறைகளும் தோற்றுவிக்கப்படவில்லை, குஜராத்தைப்போல், வங்கத்தைப்போல், கேரளாவைப்போல்!

மாறாக மக்களுக்கு நிலைமைகள் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன.

திரு. ம. பொ. சி. பல போராட்டங்களை நடத்தி முடித்து சில வெற்றிகளையும் ஈட்டிக்கொண்டிருப்பவர். திரு ம. பொ. சி. அவர்களின் போராட்டம் இல்லையென்றால் திருத்தணிகூட தெலுங்கு நாட்டுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் என்பதை நாடு மறந்துவிடவில்லை

திரு. ம, பொ. சி.யின் இப்போதைய சுயாட்சிப் போராட்டம் தேவையா? என்றும் சிலர் கேட்கின்றனர். தமிழக முதல்வர், சில காலத்துக்குத் தள்ளி வையுங்கள் என்று மட்டுமே கேட்டுக் கொண்டார். வேண்டியதில்லை என்று கூறவில்லை.

மாநில சுயாட்சிப் போராட்டம், பரந்த அளவில் நடத்தப்பட வேண்டியதாகும். தமிழகத்தில் உள்ள ஊர் ஒன்றுக்குப் பெயர் மாற்றம் செய்யவேண்டும் என்றால் கூட வடக்கின் தயவுக்குக் காத்திருக்க வேண்டிய அளவுக்கும், கோயில் ஒன்றின் பராமரிப்புக்குக்கூட டில்லியின் அனுமதியை எதிர்பார்க்க வேண்டியிருக்கிற அவலத்துக்கும், மத்தியில் குவிக்கப்பட்டிருக்கிற அதிகாரங்களின் கனம் அதிகமாக இருப்பதுதான் என்புது நாடறிந்ததாகும்.

இந்நிலையில் முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறபடி எல்லாக் கட்சியினரும் ஒன்றாகக் கூடி நடத்த வேண்டிய முக்கியமான போராட்டம் இது.

இப்போது அதற்கான காலம் கனிந்து கொண்டிருக்கிறது. வடபுலம்கூட ஒரு குழுவைக் கூட்டி, அதிகார வரம்பு பற்றிய கருத்துக் கேட்டிருக்கிறது. இதுபோல் தமிழக அரசும் ஒரு குழுவை நியமித்து யோசனைகளும், தன்மைகளும் கோரியிருக்கிறது.

மத்தியக் குழுவின் பரிந்துரைகள் எப்படி இருக்கும் என்பதையும், தமிழகக் குழுவின் பரிந்துரைகள் எப்படியிருக்கும்என்பதையும்யூகிக்க முடியுமானாலும், அவற்றின் பரிந்துரைகள் கிடைக்கின்ற வரையில் பொறுத்துக் கொண்டிருக்கத்தான் வேண்டும்.

எப்படியும் எல்லாக் கட்சிகளும் ஒருங்கிணைந்து, சுயாட்சிக்கான போராட்டம் நடத்தியே தீர வேண்டியிருக்கக் கூடும். ஆயினும் காலகெடு கொடுப்பது–தவறானதாகவோ, தீய விளைவுகளைத் தருவதாகவோ ஆகாது.

நடைபெற்று முடிந்த திரு. ம. பொ. சி. யின் போராட்டம் அதற்கான ஒரு ஒத்திகையாகவே முடிந்திருக்கிறது. துளியும் வன்முறைகளோ தீய விளைவுகளோ ஏற்படாமல் மிக மிக அமைதியாக நடைபெற்றது பாராட்டத்தக்கதாகும்.

நடைபெற வேண்டிய போராட்டத்துக்கு எல்லாக் கட்சியினரும் தம்மைத் தயார்படுத்திக்கொள்ளும் விதமான நடைமுறைகளை ஊக்குவிக்கும் நிலையை அடுத்து ம.பொ.சி. அவர்கள் தோற்றுவிக்க முயல்வார் என்று நம்புவோம்.

—சீயேயெம்.

தம்பி

காட்டாட்சி......!

பம்பாய்க்காரர் பட்டீல் காங்கிரசை கேரளத்தில் வெற்றிபெறச் செய்வதற்காக வென்றே தனியானதோர் திட்டத்துடன், அனுப்பப்படுகிருராம். புறப்படுவதற்கு முன்பு பட்டீல் தமது திட்டத்தில் ஒரு துளி எடுத்துக்காட்டினர்—ஓட்டு வேட்டைக்கு இந்தத் தடவை சினிமாப்படம் பயன்படுத்தப்படுமாம்!

மிகப் பெரும்பாலான மக்கள் தற்குறிகளாக உள்ள இந்த நாட்டிலே, சினிமா மூலம் நல்லத்தமான பிரசாரம் நடத்தலாம்—படக்காட்சியைக் காணும்போது கண்ணுக்கும் கருத்துக்கும் குளிர்ச்சி ஏற்படும — மக்கள் மகிழ்ந்திருக்கும் நேரமாகப் பார்த்து, 'காங்கிரசுக்கு ஓட்டு' தாருங்கள் என்று கேட்டுப் பெறுவது எளிது என்பது பட்டீல் வாதம்.

இந்தத் திட்டத்தை, நெடுந்தொலைவிலிருந்து, பட்டீல் வந்துதான செய்து காட்ட வேண்டுமா—பனமபள்ளியிடம் ஒரு படம் கொடுத்தால் போதாதா என்று கேட்கிருய், தெரிகிறது; ஆனல், தம்பி! ஒரு விஷயம் உனக்குப் புரியவில்லையே, கேரளத்துக்குப் பட்டீல் தேவை என்பதற்காக அவர் அனுப்பப்படுகிருர் என்று கூறப்படுகிறதே தவிர, உண்மை வேறு என்றுதான் நான் எண்ணவேண்டி இருக்கிறது.

பட்டீல், கேரளம் அனுப்பப்படுவதற்குக் காரணம், இங்கு அவர் மிகமிக அவசியமாகத் தேவை என்பதாலே அல்ல; பட்டீல் இந்தத் தேர்தலின்போது, பம்பாயில் இருக்க முடியாது, என்பதாலே அவர் கேரளம் அனுப்பப்படுகிருர் என்று எண்ணவேண்டி இருக்கிறது.

'தேர்தல் வேலை'யிலே இவர் புலி! கல்லிலே நார் உரிப்பார்! காயைக் கனிய வைப்பார்! புதுப்புதுப் பிரசார முறைகளைக் கண்டறிவார்! யாராரை எப்படி எப்படி வளைய வைப்பது, எங்கெங்கு எப்படியெப்படி நெளிந்துகொடுப்பது, என்ற வித்தைகளிலே மெத்தச் சமர்த்தர் என்றெல்லாம் கூறப்படுகிறது. இது உண்மை என்று வைத்துக்கொண்டால், தம்பி, இந்த வித்தையை அவர் தமது மாகாணத்தில் செய்து காட்டலாமே! ஏன், இங்கு வருகிருர்? தேர்தல் காலத்தில், பட்டீல் பம்பாய் ...லே இருப்பது அவருக்கோ, காங்கிரசுக்கோ நல்லதல்ல! எனவேதான், பட்டீலைப் ... கேரளாவுக்கு அனுப்புகிருர்கள்.

நான வேண்டுமென்றே கூறுகிறேன் என்று ...ரஸ்காரர் யாராவது பேசுவரேல், தம்பி, ஒரு கிழமையாக, பட்டீல் வாழ்கிற பகுதியில், காங்கிரஸ் படுகிற பாடுபற்றிப் பத்திரிகைகளிலே வருகிற செய்திகளைப் படித்துக்காட்டு.

படம் தயாரித்துக்கொண்டு பட்டீல், இங்கு வருவது இருக்கட்டும், இப்போது அவர் மாகாணத்தில் காங்கிரஸ் பெரிய புள்ளிகள் படுகிறபாடு, படமாக்கப்பட்டால் பாரெல்லாம் பரிகாசம் செய்யும்படியல்லவா இருக்கிறது!!

பம்பாய் — ஆமதாபாத் அமளி அடங்கிவிட்டது என்றும், மக்கள் அறிவு பெற்று விட்டனர், காங்கிரஸ் ஆணைக்குக் கட்டுப்பட்டுவிட்டனர் என்றும், இருமொழி ராஜ்யத்தை ஏற்றுக்கொண்டுவிட்டனர் என்றும், மொரார்ஜி தேசாயைத் திணறவைத்தவர்கள், நேரு பண்டிதரைப் பேசவிடாதபடி செய்தவர்கள், இப்போது வெட்கித் தலை

சாவன் சர்க்கார் மூர்தாபாத்!

குனிந்து கிடக்கிறுர்கள் என்றும், தேசீய ஏடுகள் மிகத் தந்திரமாகப் பிரசாரம் செய்தன.

சவான் பம்பாய் மாகாண முதலமைச்சரானுர், புதிய சூழ்நிலேயே பூத்துவிட்டது என்று பூரிப்புடன் அந்த ஏடுகள் எழுதின.

ஆனுல், நீறுபூத்த நெருப்பென; சம்யுக்த மராட்டிய இயக்கமும் மகாகுஜராத்தி இயக்கமும் இருந்து வருகின்றன!

அடுத்து வருகிற பொதுத்தேர்தலில், காங்கிரசை முறியடிப்பதற்கான ஏற்பாடுகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளன.

அந்த இயக்கங்கள் ஓய்ந்துபோயின; மாய்ந்துவிட்டன என்று டில்லி மனப்பால் குடித்தது. இல்லே! இல்லே! எங்கள் இதயக்குமுறல் அடங்காது! எமது இலட்சியம் அழிந்துபடாது! நாங்கள் எதற்கும் தயார்! என்று கூறுவதுபோல, கிளர்ச்சிக்காரர்கள், ஒரு கிழமையாகக் கொதித்து எழுந்துவிட்டுள்ளனர்.

பழையபடி, மந்திரிகள் மருள்கிறுர்கள்! மோடார்கள் உடைபடுகின்றன! கதர்க்கொடிகள் தீக்கிரையாகின்றன! குல்லாய்களேக் கொளுத்துகிறுர்கள்! குலே அறுபடும் நிலேயில், தலேதப்பினுல் தம்பிரான் புண்ணியம் என்று தலேவர்கள் ஓடி ஒளிகிறுர்கள்! கருப்புக்கொடி காட்டுவதும், கண்டன முழக்கம் எழுப்புவதும், பொதுக்கூட்டங்களே நடைபெறவொட்டாது தடுப்பதுமான காரியம், தீவிரமாகச் செய்யப்படுகின்றன!

இந்த நிலேமை நீடிக்குமானுல், தேர்தலின்போது, ஓட்டுச்சாவடிக்குப் பட்டாளக் காவல் போட்டாக வேண்டும்போலிருக்கிறது!

காங்கிரஸ் அபேட்சகர்கள் தேர்தலில் வெற்றி பெறுவார்களா என்பது கிடக்கட்டும்; மக்களிடம் இவர்கள் சென்று, ஓட்டுக் கேட்டுவிட்டு மானம் அழியாமல், மரியாதை கெடாமல், ஊனம் ஏற்படாமல், வீடு திரும்புவார்களா என்பதே அல்லவா பாவம், சந்தேகமாகிவிட்டது!

பட்டீல், மெத்தச் சமர்த்தர்தான்! இந்தச் சூழ்நிலேயில், அவர் கேரளம் நாடுகிறுர்!

தமிழ்நாடு தவிர, பிற எல்லா இடங்களிலும், மக்கள் தத்தமது மொழி, பண்பாடு, இவற்றின் அடிப்படையில் அமையும் உரிமை ஆகியவற்றுக்காகச் சிறிது வரம்பு மீறிக்கூடக் காரியத்தில் ஈடுபட்டு வருகிறுர்கள்.

இங்குதான், கோயிலில் கற்பூரம் கொளுத்துவது மூடப்பழக்கம், அது ஒழியவேண்டும்; அதை ஒழிப்பது தான் எமக்குள்ள வேலே; என்ருலும், கற்பூரக்கடை வைத்திருக்கும் காத்தமுத்து, நல்ல மனிதர், நாலேந்து குழந்தைகளுக்குத் தகப்பன், எனவே அவனுக்குப் பிழைப்புத் தரவேண்டும் என்பதற்காக, அவன் கடையிலே கற்பூரம் வாங்கிக் கோயிலில் கொளுத்துங்கள்; என்று கூற முடிகிறது! மனம் இடம் தருகிறது!!

அங்கெல்லாம், அவ்விதமில்லே; எமது பிறப்புரிமையைப் பறித்திட உனக்குத் துணிவு பிறந்துவிட்டபோது எனக்கும் உனக்கும் என்ன பந்தம் பாசம், ஒட்டு உறவு, சொந்தம், போ! போ—என்று உரிமைக்காகக் கிளர்ச்சி நடத்துவோர், முழக்கமிடுகிறுர்கள்!

அவர்கள் கையாண்டு வரும் முறைகள், தம்பி, எனக்குப் பிடிக்கவில்லே, ஆனுல் அவர்கள் உரிமைக்காக எழுச்சி பெற்று பணியாற்றும் போக்கினைப் பாராட்டாமலிருக்க முடிகிறதா!

அமைச்சர்கள் படுகிற அவதியைக் காணும்போது, பட்டீல் எப்படி அங்கு தேர்தலின்போது இருந்திட ஒப்புவார்! எனவேதான் கேரளம் வருகிறுர்.

பலமான கல்வீச்சு
போலீஸ் சவுக்கிமீது தாக்குதல்
முனிசிபல் லாரிகள் தகனம்
போலீசாருக்குக் காயம்
விளக்குகள் உடைபட்டன
பொதுக்கூட்டம் கலேக்கப்பட்டது
கைகலப்பிலே பலருக்குக் காயம்
கண்ணீர்ப்புகைக் குண்டுவீச்சு!

தம்பி, ஆமதாபாத் நகரில், டிசம்பர் 15 மாலே நடைபெற்ற நிகழ்ச்சிகளே, தலேப்புகளாகத் தந்திருக்கிறேன்; இவற்றைக் கொண்டு நீ, மனக்கண்ணுல் பார், நிகழ்ச்சியை.

கூட்டம் போட வந்துவிட்டார்களா, கூட்டம்?

அவ்வளவுக்குத் துணிந்துவிட்டார்களா, அக்ரமம், ஜீரணமாகிவிடும் என்ற எண்ணமோ!

என்று, சிறு சிறு பிரிவினர், உரையாடுவது தெரிகிறதா!

கூட்டத்தில் பேசும் பிரமுகர், எந்த போலோ பாரத் மாதாகீ என்ற முழக்கமும், மகாத்மா காந்திக்கு ஜே என்ற முழக்கமும், கோடிக்கணக்கான மக்களேச் சொக்கிட வைத்ததோ அதே முழக்கத்தின் துணையைத்தான் தேடுகிறுர்; ஆனுல் பாபம், பலிக்கவில்லே! அந்த முழக்கத்தை மிஞ்சும் வேருேர் முழக்கம் எழுகிறது.

மகாகுஜராத் ஜிந்தாபாத்!
சாவன் சர்க்கார் மூர்தாபாத்!

அடுத்த இதழில்

அறிஞர் அண்ணா
அவர்களின்
ஓட்டுச்சாவடி போகுமுன்..
என்ற தம்பிக்கு மடல் இடம்பெறும்.

காங்கிரஸ் 'பக்தி' காட்டிய படம்தான்!

இந்த முழக்கம், கலவரத்துக்கு முன் அறிவிப்பாகிறது!

ஐயோ! கல்! கற்கள்! நாலா பக்கமும்!
தலை ஜாக்ரதை, கண் ஜாக்ரதை!
ஓடிவிடுவோம், ஓடிவிடுவோம்!
பாவிப் பயல்கள்! கொலைகாரப் பயல்கள்!
கூப்பிடு போலீசை, போலீசைக் கூப்பிடு!
ஓடு! ஓடு! பதுங்கிட இடம், தேடு! தேடு!

மக்கள் இவ்விதமெல்லாம் கூவிக்கொண்டு ஓடுவது தெரியுமே, தம்பி, எண்ணத்தேரில் ஏறிச்சென்று பார்த்தால்.

அன்று, பட்டேல் தினம்!

மக்களும், தலைவர்களும், அநேகமாக, அந்த இரும்பு மனிதரை மறந்தேவிட்டார்கள்! மராட்டியத்திலும், குஜராத்திலும் அமளி நிலை இருப்பதைச் சரிப்படுத்த, எந்த ஆமதாபாத் நகரில் அவர் இட்டதுதான் சட்டம் என்ற நிலை இருந்துவந்ததோ அங்கே, படேல் தினம் கொண்டாடினால், மக்கள் பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை நாலும் கலந்த பானம் சுவைப்பது போலாகி மாச்சரியத்தை மறப்பர், என்று எண்ணிக் கொண்டனர், மக்கள் இளித்த வாயர் என்ற எண்ணம் கொண்ட இறுமாப்பாளர்.

மகாகுஜராத் இயக்கத்தினருக்கு இந்தச் 'சூட்சமம்' புரிந்துவிட்டது; நீங்களென்ன படேல் தினம் கொண்டாடுவது! நாங்கள் நடத்துகிறோம் என்றுகூறி, காங்கிரசார் நடத்துவதற்கு முன்பு, மகாகுஜராத் ஆதரவாளர் சார்பில் கூட்டம் நடத்தினர்.

படேலின் அருமை பெருமைகளை எடுத்துரைத்தனர், 'பாரதம்' அவருடைய பணியின் பயனைப் பெற்றதைக் கூறினர்; பலன் பெற்ற கூட்டம் இன்று, தமது இலட்சியத்துக்கு, மகாகுஜராத்துக்கு இழைக்கும் கேடுபற்றிக் கண்டித்தனர்.

வேறோர் இடத்திலே காங்கிரஸ் ஏற்பாடு செய்த கூட்டம்.

இதைக் கண்டதும், ஆத்திரம் பிறந்தது—ஆர்ப்பரிப்பு எழும்பிற்று—அமளி மூண்டது!

யாரோ இரண்டொரு காலிகள் செயல் என்று' தேசீய ஏடுகளாலேயே இதனை அலட்சியப்படுத்திவிட முடியவில்லை. கல்வீச்சு கண்டிக்கத்தக்க செயல்; ஐயமில்லை! ஆனால் கல்வீச்சிலே ஈடுபட்டவர்கள், விரல்விட்டு எண்ணத்தக்க சிலர் அல்ல.

மாணிக்கசௌக் பிரதேசத்தில்
3000 பேர்கள் கற்களை வீசினர்!

என்று 'மித்திரன்' தெரிவிக்கிறது!

மூவாயிரம் பேர் கல்வீச்சில் ஈடுபட்டால், எத்துணை அலங்கோலம் ஏற்பட்டிருக்கும், எவ்வளவு அமளி மூண்டுவிட்டிருக்கும்; எண்ணிப் பார்க்கும் போதே தம்பி, அந்தக் கண்ருவிக் காட்சி தெரிகிறதல்லவா?

போலீசார் 14 கண்ணீர் வாயு வெடிகளை உபயோகித்தனர்.

போலீஸ் மீது சோடாபுட்டிகள் வீசப்பட்டன.

கூட்டத்தைக் கலைக்க போலீஸ், தடியடி நடத்திற்று!

போலீசைத் தாக்கிட ஜனத்திரள் முனைந்தது.

மொத்தம் 30-போலீசாருக்கு மேல், காயமுற்றனர்.

நாலு ஆபீசர்களுக்கும் பலமான தாக்குதல்.

போலீஸ் லாரிகள் ஜருராயின்!

போக்குவரத்துக்கு ஜனக்கூட்டம் தடைகளைப் போட்டுவிட்டன!

முனிசிபல் பஸ்கள் கொளுத்தபட்டன.

தம்பி! பெரியதோர் அமளி நடந்திருக்கிறது. மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல், தேசீய ஏடுகள் தகவல்களைத் தருகின்றன!

வெறும் காலிகள் சேட்டை அல்ல இது! பொறுப்பு உணர்ந்தவர்களுக்கே, ஆத்திரம் பொங்கி எழத்தக்க விதத்தில் அநீதி இழைக்கப்பட்டால், காலித்தனமே கூட அவர்களுக்குக் கரும்பாக இனிக்கிறது போலும்!

எந்த அளவுக்கு, அங்கு காங்கிரசாட்சியின் மீது கசப்பு இருந்தால், கோபம் கொதித்தால், தம்பி இது நடந்திருக்கும் என்று எண்ணிப்பார்.

"இன்று மக்கள் தெருக்களில் காந்தி குல்லாய் அணிந்து சென்றவர்களைக் குல்லாய்களை அப்புறப்படுத்தும்படி நிர்ப்பந்தித்தனர்."

தம்பி! நிர்ப்பந்தித்தனர் என்ற நாசுக்கான பதத்துக்குப் பின்னாலே தெரியும் நானாவிதமான நடவடிக்கைகளைப் கூறவாவேண்டும்!!

ஆமதாபாத் காட்டியதைவிடவா 'காங்கிரஸ் பக்தி'யை, வேறு நகரம் காட்டமுடியும்!! அங்கு, இது! எல்லாம் எதன்பொருட்டு? மொழிவழி அரசு எனும் உரிமை அழிக்கப்படுவதை எதிர்த்து!

நமது
வழக்கறிஞர்

நமது கழகத் தோழர், திரு. மு. வில்வநாதன், எம். ஏ., பி. எல்., அவர்கள் 6—8—69 அன்று தமிழ் நாடு வழங்கறிஞர் பேரவை (பார்கவுன்சில்) யில் தம்மை ஒரு வழக்கறிஞராகப் பதிவு செய்து கொண்டார்.

மக்கள் எழுச்சியை மாய்த்திட முடியுமோ?

இங்கு மட்டுமே தேவிகுளம், பீர்மேடு பறிகொடுத்திடவும், ஐயோ! இழந்தோமே என்று கதறினால், குளமாவது, மேடாவது என்று கேலி பேசிடவும் ஒரு முதலமைச்சரால் முடியும். காரணம் என்ன? அவர்தான் தமிழரின் புதியரட்சகர்! ஒரே ரட்சகர்! ஒப்பற்ற ரட்சகர்!!—என்று நெஞ்சுநெக்குருகப் பேசும் பேரியக்கம் இருக்கிறது.

ஆமதாபாத்தில் காங்கிரசார் நடத்திய படேல் தினக் கூட்டம் காரணமாக இந்த அமளி ஏற்பட்டு பதினைந்தே நிமிஷத்தில் கூட்டம் கலைந்தது. வேறோரிடத்திலே மகாகுஜராத் இயக்கம் நடத்திய 'படேல் தினம்', இரவு நெடுநேரம் வரையில் நிம்மதியாக நடைபெற்றது.

டிசம்பர் 2ந் தேதிதான் ஆமதாபாத் ஜில்லா போலீஸ் சூபரின்டெண்டு, நகரில் குற்றங்கள் பெரும் அளவுக்குக் குறைந்துவிட்டன, என்று அறிக்கை விடுத்தார்.

எனவே, காலிகளின் சேட்டையே இவ்வளவு அமளிக்குக் காரணம் என்று கூறுவதிலே பொருள் இல்லை. வழக்கமாக இதுபோல் தத்துவ விளக்கம் தரும் ஏடுகள் கூட, இம்முறை அதுபோல் கூறிடக் காணோம்.

படேல் தினம் நடத்திப் 'படாத பாடுபட்ட' காங்கிரசார் அதிகமாக வருத்தப்படுவதிற்கில்லை; ஏனெனில் இதைவிட 'மோசமான' நிலைமை காங்கிரஸ் அமைச்சராகப் பணியாற்றும் ஒரு அம்மையாருக்கு ஏற்பட்டது. அது டிசம்பர் 14ல்,

இந்துமதி சிமன்லால் சமூகநல மந்திரி! மாதர்குல நலனுக்காக, துவக்கப்பட்ட ஜோதி சங்கத்தின் கூட்டத்தில் கலந்துகொள்ள அம்மையார் சென்றார், கிளர்ச்சிக்காரர்கள் வளைத்துக்கொண்டனர்.

அமைச்சரின் மோட்டார் 'பன்ச்சர்' செய்யப்பட்டதாம்! நடந்தே சென்றார்களாம் அமைச்சர்! வழி நெடுக, ஒரே கூச்சல், கேலி, கண்டனம், இடையிடையே கல்வீச்சு! கலவரத்தில் ஈடுபட்டவர் தொகை 2000 என்று, பம்பாய் 'டைம்ஸ் ஆப் இந்தியா' பத்திரிகை எழுதுகிறது.

அமைச்சரின் விலாவிலும் முதுகிலும் அடியாம்! அவருக்குத் துணைசென்ற பத்து பன்னிரண்டு தாய்மார்களுக்கும் தாக்குதலாம்! பெண்களைப் பாதுகாக்கச் சென்ற போலீசாரில் ஐவருக்குப் பலமான காயமாம்! இத்தனைக்கும் போலீசார், கண்ணீர்ப்புகைக் குண்டு வீசிப்பார்த்தனர், கல்வீச்சின் முன்பு, அது போதுமான பலன் தந்ததாகத் தெரியவில்லை!

கார் கெடுக்கப்பட்டு விட்டதால் கால்நடையாகச் சென்றாரல்லவா, அம்மையார்; வழியில் பாவம், உருட்டிக் கீழேகூடத் தள்ளிவிட்டார்களாம்!

இவ்வளவு சங்கடத்தையும் சமாளித்துக்கொண்டு சங்கம் சென்றார். அங்கு என்ன நடந்தது தெரியுமா, தம்பி! உள்ளே நுழையாதே' என்று முழக்கமிட்டனர். யார்? பெண்கள்! மகா குஜராத் ஆதரவாளர்.

புதிய முதலமைச்சர் சாவன் மட்டும் தப்பினாரா? 'இல்லை, தம்பி இல்லை,

ஆமதாபாத் காங்கிரஸ் மாளிகையில் ஊழியர்கள் கூட்டம் நடத்த வந்தார் முதலமைச்சர்.

வருகிற வழியிலேயே கலகம் ஆரம்பமாகிவிட்டது; கல்வீச்சு பலமாகிவிட்டது; கருப்புக் கொடிகள் ஏராளம்; கட்டுக்கு அடங்கும் போக்கு இல்லை; போலீஸ் நடவடிக்கை பலன் தரவில்லை; ஆர்ப்பாட்டக்காரர் அமளி நிலை உண்டாக்கிவிட்டனர். இது காலையில்!

மாலையிலோ, காங்கிரஸ் மாளிகையையே ஆர்ப்பாட்டக்காரர் முற்றுகையிட்டு விட்டனர். போலீஸ் வளையம், அவர்களைத் தடுத்தது; ஆர்ப்பாட்டக்காரர் வளையத்தைப் பிளந்துகொண்டு முன்னேறினர். தடியடி, கண்ணீர்ப் புகைக் குண்டு வீச்சு நடத்திப் பார்த்தனர்—பலன் கிட்டவில்லை. இடி முழக்கம்போல,

சாவன்! திரும்பிப் போ!

மகா குஜராத் வேண்டும்!

என்றனர் மக்கள். முதலமைச்சரின் முகம், பட்மாக்கப்பட்டதோ, என்னவோ! படமாக்கப்பட்டிருந்தாலும், பட்டில் அதையா, காட்டுவார், மக்களிடம்!

'மாஜி'யையும் சும்மா விடவில்லை, இந்த 'வம்புக்காரர்கள்'

அவர் இந்தத் தொல்லையே வேண்டாமென்று, பம்பாய்ப் பிரச்சினைக்குத் தலைமுழுக்குப் போட்டுவிட்டு, நேருவுக்குப் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டார்! போகட்டும் என்று விட்டுவிட்டார்களா?

அவர் ஒரு கூட்டத்தில் பேசினார்—பேச முயன்றார்.

பெருங்கூச்சல் எழுப்பினர், பேச விடாதபடி தடுத்தனர்.

இதற்கெல்லாம் அஞ்சுபவன் நான் அல்ல, என்றார் மொரார்ஜி.

எதற்கும் நாங்கள் அஞ்சுபவர் அல்ல, என்று கூறுவதுபோல, மக்கள் தொடர்ந்து முழக்கமிட்டனர்.

மொரார்ஜி, கடுமொழி புகன்று பார்த்தார்—போலீஸ் நடவடிக்கை எடுத்தது—குழப்பமோ நிற்கவில்லை.

இந்த நிகழ்ச்சி, 'பரோடாவில்' டிசம்பர் 16-ல் நடைபெற்றது.

தம்பி! குஜராத்திகள் எத்துணை கொந்தளிப்பாக இருக்கிறார்கள்—மொழிப் பற்றும், அதனுடன் தொடர்பாக உள்ள உரிமை குறித்த ஆர்வமும், அந்த மக்களுக்கு எத்தனை தேசியம்' பேசப்பட்டாலும், 'பாரதீயம்' உபதேசிககப்பட்டாலும், குலைவதாகவோ, குறைவதாகவோ காணோம் என்பதை எடுத்துக் காட்டுகிறது.

குஜராத்திகள், காங்கிரஸ் வளர கோடி கோடியாகக் கொட்டிக் கொடுத்தவர்கள்,

காந்தி மகாத்மாவை சேரயில் கட்டிக் கும்பிடும் போக்கினர்.

'மகா குஜராத்' என்ற தேசிய எழுச்சியின் முன்பு, இதெல்லாம் இருந்த இடம் தெரியாமல் போகிறது.

இத்தனைக்கும், தம்பி, குஜராத்துக்கு, தமிழகத்துக்கு உள்ளது போன்ற உலகப் புகழ் பெற்ற வரலாறு கிடையாது! எனினும் அங்கே அந்த அளவுக்கு எழுச்சி

ஏழையர் எம்மால் இது முடியாதோ?

இருக்கிறது! இங்கு, 'தமிழ்நாடு' என்ற பெயர் இல்லாவிட்டால் என்ன, குத்துகிறதா குடைகிறதா'—என்று கேட்கும் காமராஜர் பவனி வருகிருர்.

தம்பி! இந்தக் கருத்து மட்டுமல்ல நான் உன்னைக் காணச் சொல்வது. நாட்டுக்கு எடுத்துக் கூறச் சொல்வது.

அங்கெல்லாம், மொழிக் கிளர்ச்சி எவ்விதமான கோர உருவம் எடுத்திருக்கிறது. எவ்வளவு அமைதியுடன், அறநெறி நின்று இங்கு பணியாற்றுகிறேம்—இதற்கு இங்குள்ள காங்கிரஸ் அரசு. எவ்வளவு சுறுசுறுப்புடன் அடக்குமுறையை அவிழ்த்துவிடுகிறது. இதை எண்ணினேன் — பொதுமக்களுக்கு அறிவிக்க, ஒரு துண்டு வெளியீடு அச்சிட்டு வழங்கிஞல் என்ன என்று தோன்றிற்று—அது இதோ—இதை அச்சேற்றி, இல்லந்தோறும் வழங்கும் பொறுப்பினை ஏற்றுக் கொள்ளத்தான் தம்பி, நீ இருக்கிருயே. எனக்கென்ன கவலை.

காட்டாட்சி

மராட்டியம்
குஜராத்
வங்கம்

எங்கும் கலகம்

மந்திரிகளைத் தாக்கினர்
நேருவை மடக்கினர்
போலீசை அடித்தனர்
கார்களைக் கொளுத்தினர்.

கதர்க் குல்லாயைக்
கொளுத்தினர்!

நேரு படத்தை
உடைத்தனர்!

எல்லாம்
மொழி உரிமைக்கு.

அன்புடையோரே!
அறிவாளரே!

இங்கு நாங்கள்
உரிமை கேட்டோம்,
அமைதியாக
பலாத்காரமின்றி.

இங்கு
காங்கிரஸ்

தடியால் தாக்கி
துப்பாக்கியால் சுட்டு
அடக்குமுறை தர்பார் நடத்திற்று.

ஏன் என்று கேட்கமாட்டீர்களா?
நீதிக்காக வாதாடமாட்டீர்களா?

கொடுமைக்கு ஆளானேர்

உங்கள்
இனத்தவர்

உங்கள்
நாட்டவர்

உங்கள்
தொண்டர்!

அவர்களிடம் ஆதரவுகாட்டுவது
அடக்குமுறையைக் கண்டிப்பதாகும்

காங்கிரசை
ஆதரிப்பது
காட்டாட்சிக்கு
வழிகாட்டும்.

—தி. மு. க.

பட்டீல் கட்சியில் பணம் படைத்தோர் ஏராளம். பல இலட்சம் மிக இலேசாகத் திரட்ட வழி இருக்கிறது படம் எடுக்கலாம், கட்டணமின்றிக் காட்டலாம்! உன்ஞல் முடியுமா, என்ஞல் முடியுமா? நாம், நம்மாலான முறையில், நாட்டுக்கு உண்மையை எடுத்துச் சொல்வோம். ஏழைக்கு ஏற்ற எள் உருண்டை என்பார்களே, அதுபோல, இந்தத் துண்டு வெளியீடு என்று எண்ணிக் கொள்ளேன்.

தம்பி! இதுபோன்ற துண்டு வெளியீடுகளை, வீடு தோறும் வழங்கு — தூய உள்ளம் படைத்தோர்; உண்மைக்காக வாதாட முன்வந்தே தீருவார்கள். காட்டாட்சியால் நாட்டுக்குக் கேடு என்ற பேருண்மையை உணர்ந்து. அதற்கு ஏற்ப, பொதுத் தேர்தலின் போது, தமது கடமையைச் செய்வார்கள்.

அண்ணன்,



(23—12—56 திராவிட நாடு இதழில்)

மலரின் மணம்!

—வளவன்.

கண்ணே என்றேன் நானென்ருள்
மணியே என்றேன் நீயென்ருள்
கண்ணுள் மணியைப் பாரென்றேன்
என்னுள் உன்னைப் பாரென்ருள்!

அன்பே என்றேன் நானென்ருள்
அறிவே என்றேன் நீயென்ருள்
அன்பும் அறிவும் சேரென்றேன்
அதற்கு நாமே நேரென்ருள்!

அருகில் அழைத்து வாயென்றேன்
ஐயோ மாட்டேன் போயென்ருள்
அரும்பும் ஒருநாள் மலரென்றேன்
அன்றே மணமும் வருமென்ருள்!

மலரைக் காட்டி நுகரென்றேன்
மனதைக் காட்டி நுழையென்ருள்
மனதில் இருக்கும் மலர்கண்டேன்
மலரின் மணம்தான் இதுஎன்ருள்.!

With the best compliments from:

Guru Shree Shantivijai Jain Trust,

MADRAS-7.

With the best compliments from:

Pioneer Civil Works

KANGAYAM.

பழகத் தெரிய வேணும்

இதயம் எந்த ஒன்றையாவது சுமந்து கொண்டுவிட்டால், அப்புறம் அதன் கனம் தாங்க முடியாததாகிப் போய்விடுகிறது. சாதாரண எண்ணங்களின் சுமையாலேயே கனம் அதிகரித்துவிடுமென்ருல், காதல் எண்ணங்களை ஏந்திக் கொண்டுவிட்ட இதயத்தைப்பற்றிச் சொல்ல முடியுமா?

அகிலா ஒரு கல்லூரி மாணவி, நவநாகரீகங்கள் என்று எத்தனை யுண்டோ, அவை அத்தனையும் அவளிடத்திலே குடிகொண்டிருந்தன. முத்தெழிலனின் புத்தொளி வீசும் முகத்தை அவளால் மறக்கவே முடியவில்லை. எந்தத் திசையில் திரும்பிப் படுத்தாலும் அங்கே தென்படும் அத்தனைப் பொருள்களிலும் அவன் அழகு உருவமே அவளைப் பார்த்துச் சிரிப்பது போன்ற பொய்ம்மைத் தோற்றம் அவளைப் பாடாய்ப் படுத்தியது. தான் பிரைவேட் படிக்கச் செல்லத் தொடங்கிய நாள் முதல் நேற்று வரையில் ஒருநாள்கூடத் தவருமல் அவனைப் பார்த்திருக்கிருள், தனது ஐய வினுக்கள் பலவற்றை அவனிடமேகூடக் கேட்டுத் தெரிந்துகொண்டிருக்கிருள். என்ருலும் இன்றுபோல் அவள் இதயத்துக்கு அவனது முகமோ, தோற்றமோ நினைவு படுத்திவைக்கவில்லை. மெள்ள மெள்ள அரும்பிய காதல், நேற்று கனல் கக்கிவிட்டதுதான் காரணமாக இருக்கவேண்டும்!

அவனும் அவளும் பார்த்துக் கொண்ட நாட்கள், வேளைகள் பல உண்டு. ஆயினும் அந்தப் பார்வைக்குள்ளே 'தனியாக ஒன்று' தொத்திக் கொண்டிருக்கவில்லை. நேற்று அவன் பார்த்த அந்தப் பார்வையிலே 'அது' இருக்கக் கண்டாள் அவள். அது முதல் அந்தத் தோற்றத்தை அவளால் மறக்க முடியவில்லை. மனமோ அரிக்கத் தொடங்கிவிட்டது.

படுக்கையை விட்டெழுந்தாள். அறைக்குள்ளேயே அங்குமிங்கும் நடந்தாள். மெத்தையும் தலையணையுமேகூட அவனுக மாறிவிடக் கூடாதா? என்று ஏங்குகிற அளவுக்குத் தீப்பற்றிக் கொண்டு விட்டது, நெஞ்சத்தை. நடந்தால் மட்டுமே 'காதல் தீ' அணைந்து போகுமா என்ன? "பார்த்தால் பாதி" என்பார்கள். "பேசினுல் பாதி" என்பார்கள்! இப்போது பார்க்கவும் முடியாது; பேசவும் முடியாது, பொழுது விடியும் வரையில் பொறுத்திருக்க வேண்டும்!

வானெலிப் பெட்டியிடம் வந்து சிறிதுநேரம் எதனையோ உற்றுப் பார்த்தாள். அவளது முத்தெழிலனைப்போல் அது பேசவேண்டும்; பாடவேண்டும் என்ற வேட்கையோ என்னவோ! பட்டனைத் திருகி அங்கும் இங்குமாக முள்ளை நகர்த்தியதுதான் மிச்சம். இந்த நள்ளிரவில் அவள் ஏக்கத்தை அறிந்து, ஏற்ருர்ப் போன்ற பாட்டை யார் பாடிக் கொண்டிருக்கப் போகிருர்கள்? மேளுட்டு நிலையங்கள் சிலவற்றிற்கே உரிய பாணியில் கரடு முரடான வாத்தியங்களோடு ஆந்தை அலறினுற்போல பாடல்களை ஒலிப் பரப்பிக் கொண்டிருந்தன.

ஏக்கம் தீர்க்க வழி இல்லை. எண்ணியதைப் பெறவும் வழி இல்லை. குமுறிக் குமுறி அழலாம்போல இருந்தது. அழுதால் மட்டும் முத்தெழிலன் அங்கு வந்துவிடப் போகிருனு?

நான்கு மணி ஆகிவிட்டிருக்கும். ஏக்கம் அயர்வாக மாறி, கண்ணிலே பதிந்து அவளை உறக்கத்தி லாழ்த்தி விட்டது.

காலை ஆறு மணிக்கேபடுக்கையை விட்டு எழுந்துப் பழக்கப்பட்டவள். அன்று எட்டு மணி வரையிலே கூட கண்விழிக்கவில்லை. அவளது ஆசை அப்பாவே வந்து காப்பியைக் கையில் வைத்துக்கொண்டு எழுப்பும் வரையில் எழவில்லை. அப்பாவின் குரல்கேட்டு மெள்ள அசைந்து கொடுத்தாள். கண்களும் மெள்ளத் திறந்தன! அவ்வளவுதான்! வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தாள். தந்தை சிரித்துக்கொண்டே காப்பியைக் கொடுத்துவிட்டு நகர்ந்தார்.

• • •

அன்று மாலை பிரைவேட் வகுப்பு. ஆசிரியர் தமிழ்ப் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். இலக்கியத்தில் ஒருபகுதி. சாகுந்தலத்தில், துஷ்யந்தனை எண்ணி சகுந்தலை மனமுருகிக் கொண்டிருந்த பகுதியைச் சுவைபட விவரித்துக்கொண்டிருந்தார். அகிலாவின் மனத்திரையில் தானே சகுந்தலையாகவும், முத்தெழிலனே துஷ்யந்தனுகவும் காட்சிகள் வடிவெடுத்துக்கொண்டிருந்தன. ஆசிரியரின் மனத்திலோ எதிரே அமர்ந்து கொண்டிருந்த அகிலாதான் சகுந்தலையாகவும் தானே துஷ்யந்தனுகவும் இருப்பது போன்ற ஒரு உணர்வு தலையெடுக்கத் தொடங்கியது.

அன்று ஏனே அந்த வகுப்பில் முத்தெழிலனைக் காணவில்லை. கல்லூரியில் தயாராக எழுதி எடுத்துக் கொண்டு வந்திருந்த கடிதத்தை அவனிடம் சேர்ப்பிக்கவேண்டுமே! ஏமாற்றம் ஒருபுறம்! ஆசிரியர் சுவை சொட்டச் சொட்ட நடத்தும் பாடம் படுத்தும் பாடு ஒரு புறம்!

ஒருவாருக பாடம் முடிந்தது. அகிலா எழுந்தாள். வாசற்படி வரையில் வந்தாள். என்றுமில்லாத ஒரு ஏக்கம் அவளைப் பற்றிக்கொண்டிருந்தது. அகிலா தன்னை மிகவும் நெருங்கிக் கொண்டிருப்பது போன்ற ஒருஉணர்ச்சி! அகிலாவுக்கோ, தான் இனி ஒரு நிமிடம்கூட முத்தெழிலனைக் காணுமலிருக்க முடியாது போன்ற உணர்ச்சி!

புத்தகங்களை எடுத்துக்கொண்டு வாயிற்படிக்கு வந்தாள். அப்போதுதான் பரபரப்போடு உள்ளே நுழைந்து கொண்டிருந்தான் முத்தெழிலன்.

அகிலாவின் இதயம் வேகமாக அடித்துக்கொண்டது. ஆண் ஒருவருக்காக இப்படி ஒரு பெண், இவ்வளவு தூரம் உணர்ச்சிவயப்படலாமா? சமுதாயம் ஏற்குமா? பார்ப்பவர்கள் பரிகசிக்க மாட்டார்களா? என்றெல்லாம் எண்ண முடிந்த சந்தர்ப்பமா அது?

"என்ன முத்து! எங்கே போய் வருகிருய்?"

"அவசரமாக ஒரு புத்தகம் வாங்க வேண்டி இருந்தது!"

—குமாரி கே. சந்திரா—

"நான் பார்க்கலாமா?"

"ஓ! தாராளமாக"

புத்தகத்தை நீட்டினான் முத்தெழிலன். அப்படியும் இப்படியுமாகப் புரட்டிவிட்டு அவளது கடிதத்தையும் எடுத்து அதிலே வைத்து, அவனிடம் தந்துவிட்டாள் அகிலா.

"வரட்டுமா முத்து"

"பாடம் முடிந்து முடிந்து விட்டதா?"

"இப்போதுதானே தொடங்கி இருக்கிறது" இப்படிச் சொல்லத்தான் நினைத்தாள். வெட்கம் பற்றிக்கொண்டதோ என்னவோ. புன்னகை ஒன்றை மட்டும் பதிலாய்த் தந்துவிட்டுப் புறப்பட்டாள்.

அன்றிரவும் அவளுக்குத் தூக்கம் வரவில்லை. புழுவாய்த் துடித்துப் புரண்டுகொண்டிருந்தாள் படுக்கையில்.

அகிலாவைத் தன் அன்புப் பெட்டகமாக்கிக்கொள்ள முடியும் என்ற எண்ணம் இதுவரையில்முத்தெழிலனுக்கு ஏற்பட்டதில்லை. அகிலா எவ்வளவு உயர்ந்து இருக்கிறாள்! எவ்வளவு பெரிய பணக்காரி! அவளைக் கனவிலாவது நினைத்துப் பார்க்க முடியுமா என்றே இருந்துவிட்டவன், அவனிடமிருந்து அனபழைப்புக் கிடைக்கப்பெற்றால்? தன் காதலுக்காக அவள் தவியாய்த் தவித்துக்கொண்டிருப்பதாக அறிவிக்கப்பெற்றால்? வானத்தின் உச்சியில் இனம் புரியாத ஏதோ ஓர் உலகத்தில் மிதந்து கொண்டிருப்பதாக எண்ணினான். கிடைக்க முடியாத ஏதோ ஒரு பெரும் புதையல் கிடைத்துவிட்டது போன்ற பெருமிதம்!

இதயத்தின் மகிழ்ச்சித் திளைப்பு அவனுக்குஉறக்கத்தைத்தரவில்லை. இதுபோலவே மகிழ்ச்சியால் திளைத்திருப்பாள் அகிலா என்று நினைத்தான். அந்த நினைவோடே, நாளை அவளுக்குத் தரவேண்டிய பதிலை எழுத்து வடிவாக்க நினைத்தான் முத்தெழிலன்.

அன்புள்ள அகிலாவுக்கு,

முதலில் என் முத்த முத்திரைகளைப் பதித்துக் கொள்கின்றேன். அகிலா! வானத்து நிலா வையகத்துக்கு வருமா? என்ற வினாவுக்கு விடையளித்துவிட்டார்கள் மேனாட்டார். வான உச்சியிலே இருக்கும் முழுநிலாவான நீ எனக்குக் கிடைப்பாய் என்பதை தெரிந்துகொண்டேன் உன் கடிதம் மூலம்! அகிலா! அகிலா!! என்றே நான் நாளெல்லாம் பிதற்றத் தொடங்கிவிட்டேன். உன் மென்மையான உடலின்மீது மோகமா? இனிமையான் குரலின் மீது காதலா? இல்லை அகிலா. இல்லவே இல்லை. உன் இனிய அன்பான, மென்மையான இதயத்தை நான் காதலிக்கிறேன்! எவ்வளவு பாக்கியம் செய்திருக்கிறேன் தெரியுமா அகிலா! அன்பே! நாளைய நம் சந்திப்பு...அகிலா! நம்முடைய சந்திப்புதான்! நீ குறிப்பிட்ட அதே இடத்தில்தான்! அந்தப் பூங்காவிலேதான்! நான் 6 மணிக்கெல்லாம் தயாராகக் காத்திருப்பேன்! ஏமாற்றிவிடாதே அகிலா!

—முத்தெழிலன்.

இன்ப அலைகளால் அப்படியும், இப்படியுமாக அலைக்கழிக்கப்பட்ட நிலைமைகளுக்கிடையே இந்த கடிதத்தை எழுதி காதல் ரசம் ததும்பும் ஒரு நாவலில் வைத்துவிட்டு வந்து படுத்தான்! வெகுநேரம் புரண்டு கொண்டிருந்துவிட்டுத் தூங்கிப் போனான்.

* * *

அகிலாவை சகுந்தலையாகவும், தன்னையே துஷ்யந்தனாகவும் கருதிக்கொண்டுவிட்ட ஆசிரியருக்கு மட்டும் தூக்கம் வருமா? ருசிகண்ட பூனை அவர்! இளம் வயதிலேயே தன் இனிய எழில்மிக்க அன்பு மனைவியைப் பறிகொடுத்துவிட்டு ஏங்கிக்கொண்டிருக்கும் ஒரு அப்பாவி மனிதர்! முப்பத்தைந்து வயதைக் கூட எட்டிப் பிடிக்கவில்லை. அவர் விரும்பி இருந்தால் எத்தனையோ எழிலரசிகளை இன்பப் பெட்டகமாக்கிக்கொண்டிருக்கலாம். கூடாது என்றே இருந்து விட்டார்! அப்படிப்பட்டவரையே அகிலா தன் எழில் வதனத்தால், "தவம்" கலையச் செய்துவிட்டாள். படாதபாடு படும் நிலையை உண்டாக்கி வைத்துவிட்டாள்! இது அவள் செய்த தவறா? இயற்கையின் விளையாட்டா? அவள் அழகாகப் பிறந்து வளர்ந்து இருப்பது யாருடைய குற்றம்? அதுவும் முத்தெழிலனது அண்ணனாக அந்த ஆசிரியரையும் படைத்து, அவரை ஆட்டிப் படைக்கும் காதல் நோயாக அவளை ஆக்கியது யாருடைய குற்றம்?

மறுநாள் மாலை ஆசிரியருடைய மனம் செயல்பட மறுத்துவிட்டது. எவ்வளவோ சிரமப்பட்டு தன் மனத்தைக் கட்டுப்படுத்திக்கொள்ள முயற்சி செய்தார். முடிந்தால்தானே பிரைவேட்டுக்கு வந்தவர்களை நாளைக்கு வரச்சொல்லிவிட்டுப் புறப்பட்டார். எங்கே போவது என்ற ஒரு முடிவும் அற்றவராக! கால் சென்ற திக்கில் நடந்தார். கால்கள், அகிலாவும், முத்தெழிலனும் தேர்ந்தெடுத்த பூங்காவுக்குள் தானா கொண்டுவந்து சேர்க்கவேண்டும்!

பூங்காவின் நடுவிலே கட்டப்பெற்றிருந்த அழகிய சிறியகட்டடத்திற்குள்ளே இருந்து இலங்கை வானொலியின் வர்த்தக ஒலிபரப்பு, காதல் பாட்டுக்களையெல்லாம் ஒலிபரப்பிக் கொண்டிருந்தது, ஒரு வர்த்தக நிறுவனத்தின் வேண்டுகோளுக்காக!

இளம் காதலர்கள் அங்கே வந்து, அந்தப் பாடல்களைக் கேட்டு, தங்கள் காதலிகளுக்கு. அந்த நிறுவனத்தில் கொண்டு வந்து குவித்திருக்கும் புதுப்புடவை வகைகளையெல்லாம் வாங்கிக் கொடுத்துவிட வேண்டும்! விளம்பரம் இப்படி!! ஆசிரியர் எப்படி?

ஆசிரியரைப் புழுவாய்த் துடிக்கச் செய்தன அந்தப் பாடல்கள்! துடித்துக்கொண்டிருந்தார்! அங்கே அகிலாவே வந்து, 'வணக்கம் சார்' என்று சொல்லும் வரையில் துடித்துக்கொண்டிருந்தார்!

முத்தெழிலன் தனக்காக வந்து காத்திருந்துவிட்டு எங்கே போய் விடப் போகிறானோ என்ற அச்சத்தால் குறித்த நேரத்திற்கு முன்னதாகவே வந்துவிட்டாள் பூங்காவுக்கு. அங்கே துஷ்யந்தன் வேடத்தில் ஆசிரியர் அமர்ந்திருப்பார் என்பதைக் கண்டாளா என்ன?

ஆசிரியருக்கும் வாய் வரவில்லை பேசுவதற்கு! அகிலாவும் மலைத்துப் போய் நின்றுவிட்டாள்! எதிர்பாராத சந்திப்பு இருவருக்கும்! ஆசிரியர் சமாளிக்க முயன்றார்.

"அகிலா! நீ வருவாய் என்று எதிர்பார்க்கவில்லை" வார்த்தைகள் தடுமாறின.

"நான்கூடத்தான் உங்களை...." வார்த்தைகள் வெளிவர மறுத்தன.

"அகிலா! அன்று சாகுந்தலம் பாடத்தின்போது நீ......நான சுவையில் மூழ்கித் திளைத்தேன் அகிலா! ஆமாம! ஆமாம்!! மூழ்கித் திளைத்தேன்......"

"நீங்கள் இனிமையான உவமைகளுடன் நன்குகப் புரியும்படிச் சொல்லிக் கொடுத்தீர்கள்."

"நன்றுகப் புரிந்துகொண்டாயா? நாளைக்கு மீண்டும அதையே நடத்துவோமா."

"சரிசார், அப்போ நான் வரேன் சார்" என்று தடுமாற்றத்தோடு கூறிவிட்டு நகரத் தொடங்கினாள் அகிலா. ஆசிரியரோ தனது இதயக் கருத்தை எடுத்துக் காட்டிவிட்டதாக நம்பினார். தடுமாற்றங்கள் நின்றன. தவிப்பு அடங்கியது, ஒரு தெளிவும். நம்பிக்கையும் பிறந்தது! அமைதியாக அடங்கினார்.

ஆனால் அகிலா? ஆசிரியர் சொன்னதிலே உட்பொருள் ஏதும் இருப்பதாக உணர்ந்தாள் இல்லை. பாடத்தைப் பற்றிக் கேட்டதாக மட்டுமே நம்பினாள். ஆகவே ஆசிரியர் சந்திப்பு. அவளுக்கு எந்த மாற்றத்தையும் தரவில்லை. கைக்கடிகாரத்தைப் பார்த்தாள், மணி ஆறேகால் ஆகிவிட்டிருந்தது.

முத்தெழிலனைக் காண முடியாமல் போய்விடுமோ? வந்து திரும்பி விட்டிருக்கலாமோ? இப்படியோசித்துக்கொண்டே பூங்கா முகப்பிலிருந்து திரும்பினாள். அங்கே, அவன் அவளுக்காகக் காத்திருந்தான். கண்கள் பேசிக்கொண்டன. வாய்விட்டுப் பேசிக்கொண்டால் அகிலாவின் ஆசிரியருக்கு அது தெரிந்துவிடும், அவனுக்கோ, தன் அண்ணன் காதிலே அது விழுந்துவிடும்! மோசமான சூழ்நிலைதான்! ஏக்கம் படர எடுத்தடி வைத்தான் முத்தெழிலன் சில அடி தூரம் போக விட்டுத் தொடர்ந்தாள், அகிலா.

ஆசிரியரின் கண்களுக்கு அவர்கள் உருவம் இப்போது தெரியாமலிருக்கக்கூடும் ஆனால் அச்சம் அவர்களை ஆட்கொண்டது. பேசவே இல்லை. பிரிந்து போய்விட்டார்கள்! அட காதலே!!

"அகிலாவுக்கு இவ்வளவு சுதந்திரம் கொடுத்திருக்கக் கூடாது' என எல்லா திக்கிலிருந்தும் சிந்தனை செய்துப் பார்த்தார் அவளது தந்தை அறவாழி. "தாயற்ற பெண் என்பதால் கொடுக்கப்பட்ட உரிமைகள். இவளை இவ்வளவு தூரம் கெடுத்திருக்க வேண்டும்" என்றும் சிந்தித்துப் பார்த்தார்! இரவு முழுவதும் சிந்தித்தார்! அகிலா தவறு செய்திருக்கிறாள் என்று மட்டும் ஒப்புக்கொள்ளவில்லை. "உலகத்தின் போக்கே அப்படித்தான் இருக்கிறது. இள உள்ளங்களின் தனிமை அப்படி ஒரு 'கவர்ச்சியால்' 'ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதிலிருந்து இனி இந்த மனித சமுதாயத்தைக் காப்பாற்ற முடியாது. இந்த இருபதாம் நூற்றாண்டுச் சமுதாயத்தை அதன் தலைவிதிப்படியே விட்டுவிட வேண்டியதுதான்," என்று முடிவுக்கு வந்து விட்டார். அப்போதுதான் அவருக்கும் தூக்கம் வந்தது! சுவரில் மறைந்து நின்று கவனித்துக் கொண்டிருந்த அகிலாவுக்கும் தூக்கம் வந்தது!

மறுநாள் மாலை. அறவாழி ஆசிரியர் வீட்டை நோக்கிப் புறப்பட்டார். கால் நடையாக. ஆசிரியரோ அப்போது தான் கல்லூரியிலிருந்து வந்து அமர்ந்து கொண்டிருந்தார் களைப்போடு. அறவாழியைப் பற்றி கேள்விப்பட்டிருந்திருந்தாரே தவிர நேருக்கு நேர் அறிமுகமில்லை அவருக்கு. அந்த ஐயத்தை விழிகளில் தேக்கி நிறுத்தினார் ஆசிரியர்.

"நான்தான் அறவாழி! அகிலாவின் தந்தை." என்று சொல்லிக் கொண்டே அருகே இருந்த ஒரு நாற்காலியில் அமர்ந்தார் அவர். அகிலாவின் தந்தை என்ற சொல் கேட்டதும் தானாக எழுந்துகொண்டன ஆசிரியரின் கால்கள்! 'பரவாயில்லை, உட்காருங்கள்,' என்று சொல்லிவிட்டு, வீடு முழுதுமாக பார்வையைப் பாய்ச்சத்தொடங்கினார் அவர்.

"வணக்கம்! உங்களை நான் எதிர்பார்க்கவில்லை" என்றார் ஆசிரியர். அவரது உள்ளத்திலே ஒரு பதட்டம்! தெளிவான திட்டவட்டமான முடிவோடு எதிரே அமர்ந்திருந்தார் அறிவாழி.

"அதனால் என்ன! அகிலா அனைத்தும் சொன்னாள். ஒரு முடிவேற்பட்ட பின்பு காலதாமதம் கூடாது. எதையும் காலத்தே முடித்து விடவேண்டும். இந்த மாதக் கடைசியிலேயே திருமணத்தை முடித்து விடலாம்! தங்கள் கருத்தைச் சொல்லுங்கள்."

விஷயம் இப்படி நேரடியாகவே இருக்கும் என்பதை எதிர்பார்த்தாரா என்ன? வியப்பு ஒருபுறம்! மகிழ்ச்சி ஒருபுறம்! பதில் சொல்லத் தயக்கம் ஒருபுறம்!

"இதில் தயங்குவதற்கு என்ன இருக்கிறது; சொல்லுங்களேன்." என்று அவசரப்படுத்தினார் அகிலாவின் தந்தை.

"தயக்கம் ஒன்றுமில்லை; உங்கள் இஷ்டப்படியே செய்யுங்கள்" அறவாழி புறப்பட்டுப் போய்விட்டார். ஆசிரியரோ, தலை கால் தெரியாமல் மகிழ்ச்சியால் துள்ளத் தொடங்கி விட்டார்! "பெரிய கள்ளியாக இருக்கிறாளே இந்த அகிலா! ஒரு வார்த்தை என்னிடம் சொல்லவில்லையே! இருக்கட்டும்! திருமணம் முடியட்டும், பேசிக்கொள்கிறேன்" என்று சொல்லிக்கொண்டே கண்ணாடியின் எதிரில் போய் நின்றார் அவர்! இருபத்தைந்து வயது இளைஞராகிவிட்ட எண்ணம்!!

அழைப்பிதழ்களை அச்சடிக்கும் பொறுப்புகளை மட்டுமல்ல, திருமணத் தொடர்பான அத்தனை வேலைகளையுமே அறவாழியே எடுத்துக்கொண்டுவிட்டார். அழைப்பிதழ்கள் அச்சடிக்கப்பட்டு, ஆசிரியர் வீட்டுக்கு 500 பிரதிகள் அனுப்பி வைக்கப்பட்டன.

பறிகொடுக்கக்கூடாத ஒன்றைப் பறிகொடுத்துவிட்ட உள்ள நிலையோடு, அவற்றை எடுத்துக் கொண்டு வந்து தன் அண்ணன் முன் வைத்துவிட்டு வெளியேறினான் முத்தெழிலன்.

அகிலாவையேதூக்கி அப்படியே அணைத்துக் கொள்வதைப்போல அழைப்பிதழைத் தூக்கி அணைத்துக்கொண்டார் ஆசிரியர். இதயமெல்லாம் நிரம்பி வழியும் இன்பக் கிளுகிளுப்போடு ஒன்றையெடுத்துப் பிரித்துப் படிக்கத் தொடங்கினார். அவர் தலை சுற்ற ஆரம்பித்தது! வானம் இடிந்து அவர் தலையில் விழத் தொடங்கியது! பூமி பிளந்து அவரை பாதாளத்துக்குள்ளே அமிழ்த்துவதைப் போன்ற நிலைக்கு ஆளானார்.

• • •

திருமணம் குறிப்பிட்ட நாளில் நடந்து முடிந்தது அகிலாவுக்கும்—முத்தெழிலனுக்கும். கல்லூரிப் பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும், மாணவ மாணவிகளும் ஏராளமான பரிசுகளைத் தந்துப் போனார்கள்! முத்தெழிலனின் அண்ணனும் அகிலாவுக்கு ஒன்றைத் தந்தார்.

அன்றிரவு—முதலிரவு. மணமக்களது வாழ்க்கைப் பாதைக்கு வழிகாட்டும் நாள் அது. அண்ணன் தன் காதலிக்குத் தந்த பரிசைப் பிரித்துப் பார்க்க விரும்பினான் முத்தெழிலன். அகிலாவும் ஆசைப்பட்டாள்.

மணமக்களுக்கு,—

என்னைவிட ஒரு ஏமாளி இந்த உலகத்தில் இருக்கமாட்டான். அகிலாவின் செயல்களால் நான் என் புலன் கெட்டிருந்தேன். அறவாழி வந்திருந்த போதும் விளக்கமாக எதுவும் கூறவில்லை. தம்பி! நீயாவது

(16-ம் பக்கம் பார்க்க)

நோட்டீஸ் கொடுத்தார்களாம்!

அன்புள்ள நண்பா!

வியர்வையினைத் துடைத்துக்கொள்ளக்கூட நேரமற்ற நிலையில் ஏடுகளும், இதழ்களும் உன் முழு நேரத்தையும் இப்படி 'ஆக்கிரமிப்புச்' செய்துகொள்ளும்படியான நாட்டு நிலைமையிலிருந்து சற்றே விடுபட்டு வருமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

"அது எபபடி முடியும் தோழா! நிஜலிங்கப்பாவின் நிமிர்ந்த நடையும் சவானின் மிரண்ட தன்மையும், மொரார்ஜிதேசாயின் 'முடிச்சு'ப் போக்கும், காமராசரின் 'நாரத' லீலையும் விலகி வரும்படியாக விடவில்லையே" என்று கேட்க நினைப்பது தெரிகிறது. எனினும் நண்பா, விலகி வந்து ஒன்றைத் தெளிவு பெற்றுக்கொண்டு பின் மீண்டும் அதுபற்றி அறிவது மிகவும் பயன்தரக்கூடும். ஓநாய் ஆட்டை விழுங்குகிறதா? ஆடு ஓநாயை விழுங்குகிறதா? இரண்டுமே ஒன்றையொன்று விழுங்கிக்கொள்ள முயல்கின்றனவா என்பதெல்லாம் புரிந்துகொள்ள நல்ல வாய்ப்புச் சித்திக்கும்!

மூன்று, நான்கு மாதங்களுக்கு மன்பு தமிழகக்காங்கிரசில் ஒரு பூசல் ஏற்பட்டிருந்தது நினைவிலிருக்கிறதா? தமிழகத் தொழிலதிபர்களில் ஒரு குறிப்பிடத்தக்கவர் என்று கருதப்படுகிற பொள்ளாச்சி மகாலிங்கம் என்பவர், அனைத்திந்தியக் காங்கிரசுக் கட்சியின் தலைவர் என்ற கடைசீ பதவியையும் துறந்துவிட்டு அல்ல—பறிகொடுத்துவிட்டுத் தமிழகம் புகுந்து 'தவக்கோலம்' கொண்டிருந்த காமராசர் என்பவர்மீது ஒரு "நோட்டீஸ்" கொடுத்திருந்தார். அந்த நோட்டீசில் அவர், "தன் மதிப்புக்கெடும்படியாகத் தாங்கள் பேசி இருக்கிறீர்கள்; இதனைத் திரும்பப் பெற்றுக்கொள்ளவேண்டும்" என்று குறிப்பிட்டிருந்தார்.

மகாலிங்கம், நோட்டீசில் என்ன குறிப்பிட்டிருந்தார் என்பதனைவிட, அது எந்தவிதமான நீதி கேட்டுக் கொடுக்கப்பட்டது என்பதனைவிட யார், யாருக்குக் கொடுத்தார்கள் என்ற மானப்பிரச்னையாக மாற்றப்பட்டு, அந்த நோட்டீஸ் கொடுத்ததன் மூலம் உலகப்பெரும் அரசியல் வித்தகரான காமராசரது தன்மானமும் சுயமதிப்பும் ஊனமடைந்துவிட்டதாகவும், அதனால் மகாலிங்கம் மீது நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் தமிழகக் காங்கிரசின் பிரதான பிரசார பீரங்கியான நவசக்தியும், நாற்றம் பரப்பும் நாத்திகமும் கொள்கைக் குழப்பக் 'கடிதமும்' நாள் தவறாமல் ஓலமிட்டதுடன், அங்கங்கே உள்ள சில காங்கிரஸ் அமைப்புக்களைக் கூட்டி கண்டனத் தீர்மானங்களையும் போட்டு த. நா. கா. க. வின் தலைவராகவிருக்கும் சுப்பி;மணியத்துக்குச் சிபார்சு செய்தன.

மகாலிங்கம் அனைத்திந்தியக் காங்கிரசுக் கட்சிக் கமிட்டி உறுப்பினர் என்பதால், அவர்மீது ஏதும் நடவடிக்கை எடுக்க வேண்டுமானால், அது அ. இ. கா. க. வினால்தான் முடியும்; த. நா. கா. க. வுக்கு அந்த அதிகாரமில்லை என்று தலைவர் சுப்பிரமணியம் அறிவிப்புக் கொடுத்தார். அதன்பிறகு நடைபெற்ற பலவிதமான உட்போராட்டங்களுக்குப் பிறகு விவகாரம் ஆறப் போடப்பட்டு, புதைக்கவும்பட்டு விட்டது.

இதிலே நண்பா, மகாலிங்கத்தை மையமாய் வைத்துக்கொண்டு, காமராசர்—சுப்பிரமணியம் இவர்களில் யார் பெரியவர்கள் என்ற 'தலைமை' ஆராய்ச்சியிலே ஈடுபட்டிருந்த் பொதுமைப் போக்கு இருந்ததை அன்று அனைவரும் அறிந்துதான் இருந்தார்கள். இயன்றவரையிலே சுப்பிரமணியத்தின் செல்வாக்கினைச் சிதைக்கும் மகத்தான காரியத்திலே தமிழ்நாடு காங்கிரசுக் கட்சியின் காமராசர் ஆதரவாளர்கள் பெரும் பங்கினை ஏற்றிருந்தார்கள். ஆனால் மகாலிங்கம் பிரச்னையிலே ஏற்பட்ட முடிவின் மூலம், சுப்பிரமணியனாரின் செல்வாக்கு சீரழிக்கப்பட்டது என்பதைவிட, காமராசரது கர்வபங்கம்தான் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது.

சுப்பிரமணியத்தையும், காமராசரையும் ஒரே மேடையிலே ஏற்றிவைத்து, அருகருகே உட்காரவைத்துப் புகைப்படம் எடுத்து ஏடுகளுக்குத்தந்து, விளம்பரப்படுத்தி இருவருக்குமிடையே கருத்துவேறுபாடு எதுவும் இல்லை என்றெல்லாம் சுட்டிக்காட்டவேண்டிய நிலைமை காமராசர் ஆதரவாளர்களுக்குத்தான் ஏற்பட்டது!

செல்வாக்கு சுப்பிரமணியத்துக்கா? காமராசருக்கா என்ற தேர்வின் முடிவு இப்படி முடிந்தது.

ஆனால் இதே போன்ற ஒரு 'கிடுக்கி' நிலை அனைத்திந்திய மட்டத்தில் காங்கிரசுக் கட்சிக்கு இப்போது ஏற்பட்டிருக்கிறது. நண்பா, இந்த நிகழ்ச்சிகள், அன்றாடம் பெற்றுத் தரும் சூடான சுவையான விருந்தினைச் சுவைத்துக்கொண்டிருந்த உன்னைத்தான் திசை திருப்பிவிட்டு பழைய கதையை நினைவுபடுத்தினேன்! பாடம் பெற! பாடம் புகட்ட!

இந்திராகாந்திக்கும், கர்ங்கிரஸ் மேலிடத் தலைவர்கள் சிலருக்குமிடையே இப்போது ஏற்பட்டிருக்கும் பூசல்களும், குழப்பங்களும், செல்வாக்கு யாருக்கு இருக்கிறது என்பதனை நிர்ணயித்துக்கொள்ளுவதற்காகவே நடைபெறுகிறதோ என்று எண்ணத்தக்கதாக இருக்கிறது. இவர்களது இந்த பகையுணர்ச்சிகளுக்கு அப்பால், நாடு என்று ஒன்று இருப்பதும், நாட்டுமக்கள் வாழவேண்டிய துர்ப்பாக்கியசாலிகள் என்பதும் மறக்

கப்பட்டிருக்கிறதே என்ற கவலையும் நம்மைக் குடையத்தான் செய்கின்றன.

'சிண்டிகேட்' என்று விளிக்கப்படும் சில மேலிடத் தலைமையினரோ, அல்லது நாட்டின் விதியையே நிர்ணயிக்கிறவர் என்று கூறப்படும் பிரதமரோ, இருவருமே இன்று வலிமைப் போட்டியில் ஈடுபட்டு நாட்டைக் குழப்பத்திலாழ்த்தி இருப்பதை எந்த அரசியல் கட்சியும் அனுமதிக்க முடியாது. விவகாரம் காங்கிரசுக் கட்சியின் தனிச் சொத்து என்றாலும், அந்தக் காங்கிரசுக் கட்சியினிடத்தில்தான் மத்திய அரசு இருக்கிறது என்கின்ற வரையில் யாராலும் ஒதுங்கி இருக்க முடியாது.

சென்ற திங்கள் பெங்களூரில்தான் 'தூறல்' தொடங்கியது என்றாலும், இவ்வளவு பெரிய சூறாவளியாக அது மாறும் என்று யாரும் நினைக்கவில்லை. சூறாவளி, புழுதிப் புயலாகவே மாறி வீசிக்கொண்டிருக்கிறது நூற்றுக்கணக்கான கிலோ மீட்டர் வேகத்தில்!

இந்தியக் குடியரசுத் தலைவர் பதவிக்கான கட்சி வேட்பாளராக திரு. கிரி ஏற்கப்பட்டிருந்தாலும் இது போன்ற நிலைமை வந்திருக்கக்கூடும். ஆனால் புழுதிப் புயலாக அது ஆகியிராது. சிறு தூறல் — பெருமழை என்கிற அளவோடு ஓய்ந்துபோய் இருக்கும். மாறாக, சஞ்சீவ ரெட்டி என்று ஆனபோது, டெல்லி திரும்பிய பிறகு. மேலிடம் முடிவு செய்த பின் ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான் என்று அறிவிப்புக் கொடுத்துவிட்ட பிரதமர் இந்திரா, மேற்கொண்டு தேர்தல் பணிகளில் மட்டுமே ஈடுபாடு கொண்டிருந்தாலும் இப்போதைய நிலைமை ஏற்பட்டிருக்க வழியில்லை.

தன் விருப்பம் மதிக்கப்படவில்லை என்று பிரதமரும், தங்கள் முடிவு மதிக்கப்படவில்லை யென்று மேலிடத் தலைவர்களும் கருதிக்கொண்டு, தாங்கள் தாங்களே மதிக்கப் பெறவேண்டும் என்ற வகையில் செயல்படத் தொடங்கியதன் எதிரொலிதான். இந்தியத் துணைக் கண்டத்து பிரதமருக்கு, அந்தப் பிரதமர் சார்ந்திருக்கிற கட்சியின் தலைவர் நிஜலிங்கப்பா, நோட்டீஸ் கொடுத்துவிட்டிருக்கிறார், கட்சிக் கட்டுப்பாட்டை மீறிவிட்டதாக!

காமராசருக்கு அனுப்பப்பட்டதும் நோட்டீசுதான், இந்திரா அம்மையாருக்கு அனுப்பப்பட்டதும் நோட்டீசுதான்! காங்கிரஸ் கட்சியின் தலைவர் நிஜலிங்கப்பாகூட இந்திரா அம்மையார் தவறு செய்துவிட்டார் — சமாதானம் தேவை என்ற வகையிலேதான் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார். பொள்ளாச்சி மகாலிங்கம்கூட காமராசர் தவறு செய்திருக்கிறார் — சமாதானம் தேவை என்றுதான் நோட்டீஸ் கொடுத்திருந்தார்!

இருவரும் நோட்டீஸ் கொடுக்கப்பட்ட சூழ்நிலை— காலம் வேறு வேறாயினும், இருவரும் சுட்டிக் காட்டுவது செய்துவிட்ட தவறுக்கு சமாதானமும், நீதியும் தேவை என்பதுதான்.

காமராசரோ, இந்திரா அம்மையாரோ தவறு செய்தார்களா என்பதல்ல இங்கே சுட்டிக் காட்டப்படுவது. இருவருக்கும் நோட்டீஸ் கொடுக்கப்பட்டது என்கிற வரையிலேதான்! காமராசருக்கு நோட்டீஸ் கொடுத்தவர், காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த ஒரு தனி நபர். பிரதமருக்கு, கட்சியின் தலைமையே கொடுத்து விளக்கம் கேட்டிருக்கிறது.

மகாலிங்கம் நோட்டீஸ் கொடுத்துவிட்டார் என்று செய்தி கேட்டுப் பதைத்தெழுந்தவர்களை இப்போது தமிழகத்திலே காண முடியவில்லை. மாறாக, நோட்டீஸ் கொடுக்கப்பட்டது சரியானதுதான்; தேவையான நடவடிக்கைதான்; வாழ்த்துகிறோம்; வரவேற்கிறோம் என்கிற வகையிலே, மகாலிங்கம் கொடுத்த நோட்டீசைக் கண்டித்து கச்சை வரிந்து கட்டிக் கிளம்பிய ஏடுகள், இதழ்கள் எழுதத் தொடங்கி இருக்கின்றன! செய்திகளைத் தருகின்றன!!

இந்திரா அம்மையாருக்கு மட்டுமல்ல—அவரோடு அமைச்சர் பொறுப்பிலிருக்கும் ஜகஜீவன்ராமுக்கும், பக்ருதீன் அலி அகமத் ஆகியோருக்கும் நோட்டீஸ்தரப்பட்டிருக்கின்றன! நோட்டீஸ் மூலம் விளக்கம் கோரப்பட்டிருக்கிறது தங்கள் நடத்தைகளுக்காக!

நண்பா, எப்போதுமே மனச்சான்று கூறுகிறபடி நடந்துகாட்டவும், கட்சிக் கருத்தினை அனைத்துச் செல்லவும், இனியொரு மேதையினை இன்னோர் முறை நாம் பெறப்போகிறோமா? எல்லாருமே பேரறிஞர் அண்ணா அவர்களாக இருக்க முடியுமா? அப்படி இருந்துவிட்டால், அறிஞர்களையும் மேதைகளையும் இனங்கண்டுகொள்ள முடியுமா?

அதனால்தான் நண்பா பிரதமர் இந்திரா அம்மையார் தான் இந்திராவாகவே—நேருவின் தவப்புதல்வியாகவே இருந்துகொண்டிருக்க முயல்கிறார். அது போலவே, நிஜலிங்கப்பா, அதுல்யாகோஷ், சவாண், படேல் போன்றோர், அவர் அவர்களாகவே இருக்க முயல்கிறார்கள்! ஒவ்வொருவரும் தங்கள் வாழ்வுக்கும் மூச்சுக்கும் முழு முதற்காரணமானவர்கள் காந்தியடிகளும் நேரு பிரானும்தான் என்பதை மறந்துவிடுகிறார்கள். அதுமட்டுமல்லாமல், இந்திரா அம்மையார் உட்பட ஒவ்வொரு தலைவர்களுமே தங்களை நேரு வென்றோ, காந்திஜியென்றோ நினைத்துச் செயல்படவும் தொடங்கி இருக்கிறார்கள்! விளைவுகள் அனைத்தும் இந்த எண்ணச் சனியனின் அறுவடைகளால் விளைகின்றன! நாட்டுமக்கள் மறக்கப்படுகின்றனர்! மக்களது வாழ்வு மறக்கப்படுகிறது.

காமராசருக்கு நோட்டீஸ் கொடுக்க மகாலிங்கத்துக்கு உரிமையுண்டா என்று அன்று கேட்கப்படக்கூடிய சூழ் நிலையினை யாரும் தோற்றுவிக்காவிட்டாலும், இந்திரா அம்மையாருக்கும் மற்ற அமைச்சர்களுக்கும் நோட்டீஸ் கொடுத்து அதனைப் பிரபலப்படுத்தித் தீரவேண்டிய நிலைமை இன்றைக்கு வேர்விட்டிருக்கிறது.

'சிண்டிகேட்' என்ற குழு இயங்கிக்கொண்டிருக்கிறதா? பாராளுமன்ற காங்கிரசுக் கட்சி, முழு வலிவோடு செயல்படுகிறதா? இந்திராவைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் அனைத்திந்தியக் காங்கிரசுக் கட்சியின் செயற்குழுவுக்கு உண்டா இல்லையா? என்பதை ஐயவினவாக விடுக்க — நோட்டீஸ் கொடுக்கப்பட்ட நிகழ்ச்சி நம்மைத் தூண்டிவிட்டிருக்கிறது!

யார், யாரைவிட மதிப்பில் மிகுந்திருக்கிறார்கள் என்ற ஆராய்ச்சிக்குரியதல்ல இக்கடிதம் என்பதால்— காமராசரது நாரதத்தனம் பற்றி ஆராய இக்கடிதத்தைப் பயன்படுத்தவில்லை யாதலால், மொரார்ஜியின் முடிச்சுக்கள் பற்றி இங்கே குறிப்பிடத் தேவையில்லை ஆதலால்—இந்திரா அம்மையாரின் விபரீத விளையாட்டுக்கள் பற்றி இங்கே குறிப்பிடும் நோக்கமில்லையாதலால் அதுபற்றி விளக்கவில்லை! ஆனால் நண்பா, நோட்டீஸ் கொடுத்து விளக்கம் கேட்கும் நிலைக்குக் காங்கிரசுக் கட்சி வந்துவிட்டதே! என்று பரிதாபப்படாமலிருக்க முடியவில்லை என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புள்ள,

திருவாரூர் முத்துராமன்

காஞ்சி 24—8—69 REGD. No. M. 8326

செயல்படுத்துங்கள், சீக்கிரம்!

கங்கை,—காவிரி இணைப்புப் பற்றிய பிரச்னை இப்போது செயல் வடிவம் பெறும் முதல் கட்டத்தை எட்டி யிருப்பதாகச் செய்தி வந்திருக்கிறது. முதலாவதாக இதன் உபரி நீரை, தெற்கு நோக்கித் திருப்புவதும், துணைக் கால்வாய்கள் மூலம் இராசஸ்தான்.—மைசூர் பகுதிகளுக்கு நீர் வழங்குவது முடியக் கூடியதா என்பதும் ஆராயப்படுமாம்! 2000 மைல்களுக்கு மேற்பட்ட கால்வாய் ஒன்றும் வெட்டப்பட வேண்டி இருக்கக் கூடுமென்றும், இது சோனே, நர்மதை, கோதாவரி, கிருஷ்ணா, பாலாறு, பெண்ணாறு போன்ற ஆறுகளின் படுகைகளைக் கடந்து செல்லக் கூடிய வாய்ப்புப் பெறுமா என்பது பற்றியும் ஆராயப்படக் கூடுமாம்! இது செய்தியாக மட்டுமே இல்லாமல் செயல் வடிவம் பெறும் நடைமுறைகளை உடனடியாகச் செய்தால் அப்புறம், பசியாவது, பஞ்சமாவது, பட்டினியாவது!!

வீட்டு மனை விற்பனை!

நிலா மண்டலத்துக்கு மனிதனை அனுப்பிவைத்த அறிவாளியைவிட, இன்னொர் அறிவாளி உதயமாகி இருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. முதல் மேதை மனிதனை மட்டும் அனுப்பிவைத்தான். இரண்டாம் நபரோ, நிலாத் தரையில் வீட்டுமனைகளை விற்பனையே செய்துவிட்டிருக்கிறான். 300X300 சதுர கெஜம் உள்ள ஒரு மனைக்கு 24 டாலர் விலை வீதம் விற்பனை செய்திருக்கிறான் அந்த மேதை. பூமண்டலத்தில் இருந்தபடியே, தனக்கு நிலாவுலகில் நிலமிருப்பதாகக் கூறவும், அதற்கு விலை நிர்ணயிக்கவும் வேண்டுமானால் எவ்வளவு அறிவு வேண்டும்! ஒரு பிழைக்கும் வழியாக இதனை மேற்கொள்வது என்றால் அதற்கு எவ்வளவு துணிவு வேண்டும்! பிரேசில் நாட்டிலுள்ள கோசிகாசியானோ என்பவன், இதுபோல் நிலாத் தரையில் தனக்குச் சொந்த நிலம் இருப்பதாகக் கூறி 24 டாலர் விலைக்கும் விற்றிருக்கிறான். இதனையும் பலபேர் பொருள் கொடுத்து வாங்கி இருக்கிறார்கள். பலபேர் மனுச்செய்து கொண்டுமிருக்கிறார்கள்! முன்னதைவிட, பின்னதுகூட அறிவின் முதிர்ச்சியல்லவா!

கேட்டீரா சேதி!

உண்மையோ பொய்யோ!

திபேத்திய மதகுருக்கள் தலாய்லாமா, பஞ்சன்லாமா என்போர். தலாய்லாமா இந்தியாவில் சரண் புகுந்திருந்தார் சீன ஆக்கிரமிப்புக் காரணமாக! பஞ்சன்லாமாவோ சீனாவிடம் சிக்கிவிட்டிருந்தார்! இப்போது அவர் சீனாவிலிருந்து தப்பிவிட்டாராம்! சீனாவிலிருந்துகூட ஒருவர் உயிருடன் தப்ப முடியுமா என்று வியக்கத்தான் வேண்டும்! பஞ்சன்லாமா கெட்டிக்காரராகத்தான் இருக்கவேண்டும் — செய்தி உண்மையாக இருக்குமானால்!

புட்டோவுக்கும் பே, பே!

அதிபர் அயூப்கான் கைவிட்ட பாகிஸ்தான் ஆட்சியை ஏற்றுக்கொண்ட பாக். அதிபர் யாயாகான், அடுத்த 18 மாதங்கள் வரையில் இராணுவ ஆட்சிதான் நீடித்திருக்கும் என்று அறிவித்திருக்கிறார். ஏனென்றால் பொதுத் தேர்தலை நடத்துவதற்கு இன்னும் 18 மாத கால அவகாசம் வேண்டும் என்று கூறி இருக்கிறார். இந்த இடைக்காலத்தில் எல்லாவிதச் சுரண்டலையும், குறுகிய மனப்பான்மையையும் ஒழித்துச் சகிப்புத் தன்மையை உண்டாக்கப் போகிறாராம் அவர்! ஒரு ஆட்சிக்குரிய நீண்டகாலக் கொள்கை, கோட்பாடுகளே இவைகள் தானே! இந்த அவகாசம் போதுமா என்று புட்டோவால்கூட கேட்க முடியாதே!

வருந்துகிறோம்!

தமிழக சட்டமன்ற உறுப்பினர் சண்முகசுந்தரம், விபத்துக்காரணமாக கால் முறிந்து மருத்துவமனையிலிருந்து உயிர் நீத்தார் என்றசெய்தி கேட்டுவருந்துகிறோம். பெருந்துறைத் தொகுதியிலிருந்து அண்மையில்தான் இடைத்தேர்தல்மூலம் வெற்றி பெற்றுவந்து ஒரே ஒருநாள் மட்டுமே சட்டமன்றக் கூட்டத்தில் கலந்து கொண்டிருக்கிறார் என்பது மிகவும் வேதனைக்குரியதாகும், குடும்பத்தாருக்கும், தொடர்புடையவர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்கள்!

மத்திய அரசில் முன்னாள் கல்வி அமைச்சராகவிருந்த டாக்டர் உமாயூன்கபீர் மருத்துவமனையில் காலமான செய்தி அதிர்ச்சிக்குரியது காங்கிரசுக்கட்சியின் முதிர்ந்த தலைமையிடத்தில் இருந்த இவரது இழப்பு, நாட்டுக்கும், காங்கிரசுக்கும் ஈடற்றதாகும்.

★

13-ம் பக்கத் தொடர்ச்சி

இன்புற்றிருப்பதிலே எனக்கு மட்டிலா மகிழ்ச்சியடா! என்நிலை எந்த ஒரு அண்ணனுக்கும் ஏற்படக் கூடாது என்று இறைவனிடம் தான் கேட்டுக்கொள்ள முடியும். பெண்கள் உலகம் புரிந்து கொள்ளப்பட முடியாத ஒரு புதிராக இருக்கும் வரையில், உலகில் இப்படி நடப்பதையும் தடுக்க முடியாது! நீங்கள் காதலர்கள் என்பதை அறியாது நான் அகிலாவை விரும்பினேனே. பாவி! தம்பி, என்னை மனனிப்பாயா? உலகில் யார் யாரிடம் எப்படிப் பழகுவது என்பதைத் தெரிந்து கொண்டு பழகவேண்டும். பழகத் தெரியவில்லை என்றால்...

—ஏமாளி அண்ணன்.

கடிதத்தைப் படித்து முடித்த இருவருக்குமே வியப்பு மேலிட்டது. யார் யாரைக் காதலித்தார்கள்! 'ஐயோ!' என்று கூச்சலிட்டு விட்டாள் அகிலா. 'அண்ணா' என்று கதறினான் முத்தெழிலன். முதலிரவு —அதன் முழுமையை எய்தவில்லை.

பொழுது விடிந்தது. ஆசிரியரின் படுக்கை அறையிலிருந்த ஒரு கடிதம், அவர் வேலையைத் துறந்து வேற்றூருக்குப் போய்விட்டார் என்பதை எடுத்துரைத்துக் கொண்டிருந்தது.

★

ஆசிரியர், வெளியிடுபவர் சி.என்.ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-26, திருக்கச்சிநம்பி தெரு அல்லி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.